


# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 7
செய்தி 2
ஜுலை 2021
விலை ரூ 10/-




நல்லா பாத்துக்க...
நாலு சொட்டு பெட்ரோல் போட்டாச்சு..!
பெட்ரோல்
Com.RaKu


ஊழலில்
இருளும் இந்தியா
ரஃபேல்
Com.RaKu

# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**ஜூலை 2021**


**உள்ளே....**


- ★ கனவுகளை நினைவுகளாக எதிர்பார்க்கும் மின்வாரிய ஊழியர்கள்
- ★ நூறாண்டு காணும் தோழர் என்.எஸ்
- ★ மின்வாரிய செயல்பாடும் தணிக்கை துறை அறிக்கையும்
- ★ மின்வாரியம் அகவை 65
- ★ ஒப்பந்த தொழிலாளர்கள் போராட்டம்
- ★ கணக்கீட்டாளர் 4000 காலிப்பணியிடங்கள் வசூல் பணி தேக்கம்
- ★ போராளி மூவலூர் இராமாமிர்தம்
- ★ ஒன்றிய அரசின் வரிவிதிப்புக் கொள்ளை
- ★ 200 நாட்களை கடந்த விவசாயிகள் போராட்டம்
- ★ அடக்குமுறை சட்டங்களால் கொலை



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# கனவுகளை நினைவுகளாக எதிர்பார்க்கும் மின்வாரிய பணியாளர்கள்

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திமுக அரசு பதவி ஏற்று இரண்டு மாதங்கள் ஆகிறது. தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்துத்தான் மக்கள் மின்வாரிய பணியாளர்கள் உட்பட வாக்களித்தார்கள். புதிய அரசின் கொரானா தொற்று பரவலை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள், கோவில் நிலங்களை மீட்டது, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையை ரத்து செய்தது, தொழிலாளர் நல வாரியத்தை புதிப்பித்தது, பொருளாதாரக்குழு அமைப்பு, வளர்ச்சிக்கு திட்டங்களை தீட்டி நடவடிக்கை எடுத்தது, மகளிருக்கு அரசு நகர பேருந்தில் இலவசமாக பயணிக்க அனுமதி அளித்தது. பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைத்தது, என்பன போன்ற நடவடிக்கைகள் வரவேற்க தக்கது.

கொரானா தொற்று காலத்தில் ஆட்சி பொறுப்பு ஏற்பு திமுக அரசு குடும்பத்திற்கு மாதம் ரூ.2000/- வீதம் 2 மாதங்களுக்கு கொடுத்தது நல்ல அம்சம். ஆனாலும் முறைச்சாரா தொழிலாளர்களின் கோரிக்கையும், மின்வாரியம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் வேலை வாய்ப்பை இழந்த ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிலுவையில் இருக்கின்றது.

ஒன்றிய அரசு கொரானா தொற்று நோய் காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு உதவி செய்வதை விட கார்ப்பரேட்டுகளுக்கு அதிக அளவில் உதவிகள் செய்கின்றன. பெட்ரோல், டீசல், எரிவாயு உருளை விலை உயர்வினால் பாமரமக்களும் பரிதவித்து போனார்கள். வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் சொந்த மண்ணில் அகதிகளாகும் அவல நிலை உருவாகுமோ என்ற கவலை ஏற்பட்டுள்ளது. கவலையை நீக்க வர்க்க ஒற்றுமையை வலுப்படுத்தி போராட வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

இந்த காலக்கட்டத்திலும் மத்திய அரசு பொத்துறையான மின்துறையை தனியார் மயப்படுத்த மின்சார சட்டதிருத்த மசோதா

2021-ஐ எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்தவற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பும், தேசத்தை நேசிக்கும் தேசபக்தர்களும் விவசாயிகளும் இணைந்து மத்திய பிஜேபி அரசின் இந்த நடவடிக்கையை முறியடிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த சூழ்நிலையில் தமிழக அரசின் முதல்வர் பிரதமரை புதுடெல்லியில் சந்தித்த பொழுது மின்சார சட்ட திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என வேண்டுகோள் வைத்துள்ளார். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் மின் இணைப்புகளுக்கு ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படும் என மின்துறை அமைச்சர் கூறி இருப்பது ஒருவித அச்சத்தை உருவாக்கியுள்ளது. ஸ்மார்ட் மீட்டர் பொருத்தினால் மின் நுகர்வோர்கள் தாங்கள் விரும்புகின்ற தனியார் மின்சாரத்தை எதிர்காலத்தில் பெறவழி வகுக்கும்.

தமிழக மின்வாரியத்தில் கடந்த அதிமுக ஆட்சியில் தனியாருக்கு இயக்கவும் பராமரிக்கவும் விடப்பட்ட துணை மின் நிலையங்களுக்கு பதவிகள் அனுமதித்திருப்பது பாராட்டத்தக்கது. ஒரு நீண்ட நெடிய போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வும் வழங்கப்பட வேண்டும். காலிப்பணி இடங்கள் நிரப்பப்பட வேண்டும். பறிக்கப்பட்ட சலுகைகள் திரும்ப கிடைக்க வேண்டும். என்ற எதிர்பார்ப்பும் அனைவரிடமும் உள்ளது. எதிர்பார்ப்புகள் நடந்தேற மின்வாரிய நிர்வாகமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்கும் என நம்புவோம்.









தோழர் சங்கரய்யா அவர்களுக்கு வயது 100 என்று சொல்வதைவிட, தொண்டுக்கு வயது 100 தியாகத்திற்கு வயது 100, ஒழுக்கத்திற்கு வயது 100, தூய்மைக்கு வயது 100 என அடிக்கிக் கொண்டே போகலாம்.

மார்க்சிய கோட்பாட்டின் அடிப்படையில் இன்று வரை வாழ்ந்து வரும் உன்னதப் போராளி அருமைத்தோழர் சங்கரய்யா அவர்கள். தோழர் சங்கரய்யா அவர்கள் வாழும் மார்க்சியம்.

நாட்டின் சுதந்திரத்திற்காகவும் உழைக்கும் மக்களின் உரிமைக்காகவும் இளமைக்காலம் முதலே போராடி எட்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து என்பது ஆண்டுகளாக மக்கள் பணி செய்து வாழ்ந்து வரும் எளிமைக்குச் சொந்தக்காரர்.

தோழர் என்.எஸ். அவர்களின் வாழ்க்கை அப்பழுக்கற்ற பொது வாழ்வும் மக்கள் சேவையும் மகத்தான தியாகம் கொண்ட ஒரு நீண்ட நெடிய வாழ்க்கை வரலாறு இன்றைய தலைமுறை தோழர் சங்கரய்யா அவர்களின் வாழ்க்கையை கற்றுணர்வது அவசியமும் கூட!

தோழர் சங்கரய்யா 1922-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம்தேதி கோவில்பட்டியில் பிறந்தார். சங்கரய்யாவிற்கு அவர்கள் பெற்றோர் வைத்த பெயர் பிரதாப சந்திரன் என்பதாகும். சங்கரய்யாவின் பாட்டனார் L.சங்கரைய்யா தனது இரண்டாவது பேரனான பிரதாபசந்திரனுக்கு தனது பெயரைத்தான் வைக்க வேண்டுமென வலியுறுத்தி இரண்டு நாட்கள் உணவருந்த மறுத்து விட்டார் அதன் பின் அவரது தந்தை நரசிம்மலு, தாயார் ராமானுஜம் பிரதாப் சந்திரன் என்ற பெயரை சங்கரய்யா என்று மாற்றினார்கள்.

1937-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்தலில் வெற்றி பெற்ற தோழர் சங்கரய்யா அமெரிக்கன் கல்லூரியில் இண்டர் மீடியட் படிப்பில் சேர்ந்தார். அமெரிக்க கல்லூரியின் மாணவர் மன்றத்தில் இணைச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். 1936.ல் தமிழகத்தில் முதல் கம்யூனிஸ்ட் குழு உருவானது. அந்த காலக்கட்டத்தில் தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்துவதற்கு தோழர்கள் ஏ.கே. கோபாலன் , சுப்பிரமணிய சர்மா போன்ற ஊழியர்கள் கேரளத்தில் இருந்து தமிழகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

தமிழகத்தில் கல்லூரி மாணவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களிடையே தேசிய மனப்பான்மை கொண்டவர்களை கம்யூனிஸ்ட் களாக்கும் பணியில் இறங்கினார்கள் தோழர் ஏ.கே.ஜியும், சர்மாவும். அவர்கள் மாணவர் அரங்கத்தில் சங்கரய்யாவோடு தொடர்பு கொண்டு தேசிய மனப்பான்மையை வளர்த்தனர்.

1938-ல் மதுரையில் சுதந்திரப் போராட்டத் தின் வீச்சு, பல கிளர்ச்சிகளை நடத்தியது மாணவர் சங்கம். மாணவர் சங்கம் மதுரை முழுவதும் கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் களிடையே உறுப்பினர் சேர்ப்பு என்பதும் துவங்கப்பட்டு சங்கம் அமைக்கும் பணியும் நடைபெற்றது.

சிறிது காலத்திற்கு பின் மாணவர் சங்கம் மதுரையில் எழுத்தறிவு இயக்கத்தை துவங்கியது. அன்றைய காங்கிரஸ் தலைவர் காமராஜர் இந்த இயக்கத்தை தொடங்கி வைத்தார். சுதந்திரம், சமாதானம், முன்னேற்றம் என்று பொறிக்கப்பட்ட மாணவர் சங்க கொடியை கரங்களில் ஏந்தி மக்கள் பிரச்சனைகளை கையில் எடுத்து பெரும் ஊர்வலங்களை நடத்தினார்.

ஒன்றுப்பட்ட மதுரை மாவட்டத்தில் மாணவர் சங்கம் பெருகுவதைக்கண்ட அமெரிக்கன் கல்லூரி நிர்வாகம் தோழர் என்.எஸ். அவர்களை கல்லூரியில் இருந்து வெளியேற்ற திட்டமிட்டு மாற்றுச்சான்றிதழ் கொடுத்து விடுவதாக கூறினார். கல்லூரி நிர்வாகம் இந்த உத்தரவை திரும்பப் பெறாவிடில் வேலை நிறுத்தம் நடக்கும் என சங்கரய்யா எச்சரித்தார்.

வேலை நிறுத்தம் நடந்தால் கல்லூரி நிர்வாகம் பாதிக்கப்பட்டு விடும் என அஞ்சிய நிர்வாகம் சங்கரய்யாவை வெளியேற்றும் உத்தரவை திரும்பப் பெற்றது.

1939 செப்டம்பர் 4-ல் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மதுரைக்கு வந்தார். தோழர் சங்கரய்யா ஏற்பாடு செய்திருந்த மாணவர்கள் கூட்டத்தில் நேதாஜி உரையாற்றினார். அப்பொழுது இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

1940-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மதுரையில் கம்யூனிஸ்ட் கட்சி முதல் கிளை உருவாக்கப்பட்டது. இதில் சங்கரய்யா உறுப்பினராக இருந்தார்.

1941-ல் பிப்ரவரி 28-ந்தேதியன்று ஆங்கிலேய அரசாங்கம் தோழர் சங்கரய்யாவை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தது, 15 நாட்களுக்கு பின்பு மதுரையிலிருந்து வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். பல்வேறு கட்டபோராட்டங்களுக்கு பிறகு 1942 ஜூன் மாதம் 26-ந்தேதி விடுதலை செய்யப்பட்டார்.

1942 ஜுலை மாதத்தில் மாணவர் சங்கத்தின் தென்பிராந்திய சிறப்பு மாநாடு சேலத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் மாணவர் சங்கம் மாநில வாரியாக பிரிக்கப்பட்டது. அதில் தோழர் சங்கரய்யா பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். மாநிலம் முழுவதும் மாணவர் சங்கத்தை கட்டுவதில் தோழர் என்.சங்கரைய்யா பெரும் பங்காற்றினார்.

1942 ஆகஸ்ட் 8-ம் நாள் மும்பை நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மாநாடு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை முடிவு செய்தது. மகாத்மா காந்தி "செய் அல்லது செத்துமடி" என்ற முழக்கத்தை தொடுத்தார்.

மறுநாள் மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட இடங்களில் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள். மாணவர் சங்க அமைப்பு பணிக்காக நெல்லை சென்ற சங்கரய்யா ஜெயின் ஜான் கல்லூரி மாணவர்களின் ஊர்வலத்தில் கலந்து கொண்டு பேரணியில் சென்றார். கலெக்டர் பங்களாவின் அருகில் பேரணி வந்தவுடன் கடுமையாக மாணவர்கள் அனைவரையும் போலீசார் தாக்கினர். தோழர் சங்கரய்யாவிற்கு வயிறு, விலா, எலும்புகள் மீது பலத்த அடிவிழுந்தது.

சில தினங்களுக்கு பின் சங்கரய்யாவை கைது செய்து மதுரை சிறையில் அடைத்தது. 15 நாட்கள் கழித்து வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். ஆனாலும் அன்றைய ஆங்கிலேய அரசு சங்கரய்யாவின் நடவடிக்கையை தமிழகத்தில் கட்டுப்படுத்த கண்ணனூர் சிறைச்சாலைக்கு மாற்றியது. வேலூர் இரயில் நிலையத்திலிருந்து கண்ணனூர் இரயில் நிலையம் வரை அனைத்து இரயில் நிலையங்களிலும் தோழர்கள் ஒன்று கூடி வாழ்த்து கூறினார்கள்.

கண்ணனூர் மத்திய சிறையில் இருந்த பொழுது கண்ணனூர் மாவட்டம் கையூரைச் சேர்ந்த 25 வயதுக்குட்பட்ட மடத்தில்அப்பு, குஞ்ஹாம்பு நாயர், சிருகண்டன், மற்றும் அபுபக்கர் ஆகிய தோழர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு 1943 மார்ச் 20.ந்தேதி தூக்கிலிடப்பட்டனர். தோழர் சங்கரய்யா கைய்யூர் தியாகிகளை சந்திக்க அனுமதி கோரியும் சிறைத்துறை மறுத்து விட்டது. சோகத்தில் மூழ்கிய சங்கரய்யா அன்று உண்ணாவிரதம் இருந்து கைய்யூர் தியாகிகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். அதன் பின் சிறிது காலத்திற்கு பின் சங்கரய்யா தஞ்சாவூர் விசேஷ சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

1944 மே மாதத்தில் சங்கரய்யா விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான சில வார காலத்திற்குள் கட்சியின் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

1943 முதல் 1947 வரை கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்ட வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டுகளாகும். யுத்தகால நெருக்கடி காரணமாக அத்யாவசிய பொருட்கள் கிடைக்காத சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மக்களை திரட்டி பெரும் போராட்டங்களை நடத்திய கால கட்டம். மதுரை ஆர்.வி. மில்லின் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் கூலி உயர்வுக்கும், தொழிற்சங்க உரிமைகளுக்கும் கிளர்ந்து எழுந்து போராடி வெற்றி கண்ட காலகட்டம். காங்கிரஸ்காரர்கள் கம்யூனிஸ்ட் களின்

மீது கட்டவிழ்த்து விட்ட தாக்குதல்களை முறியடித்த காலம் ஆகும்.

கலை, இலக்கியம், ஆடல், பாடல் என்பதை பயன்படுத்தி உழைக்கும் மக்களை கிளர்த்தெழச் செய்த காலம். கட்சியின் வளர்ச்சிக்கு கலையும் இசையும் பெரிதும் உதவி புரிந்தன.

மாணவர் சங்க தலைவர்களில் ஒருவரும், சிறந்த பாடலாசிரியருமான எம்.பி. ஸ்ரீனிவாசன் எழுதிய விடுதலை போரில் வீழ்ந்த மலரே என்ற பாடல் சங்கரய்யாவிற்கு மிகவும் பிடித்த பாடலாகும். இன்றும் அப்பாடலை கேட்கும் போது உணர்ச்சி பெருக்கில் ஆழ்ந்து விடுவார்.

1946-ல் உணவு தானிய பதுக்கல் விவகாரத்தில் கம்யூனிஸ்ட்டுகள் தலையிட்டு பதுக்களை கைப்பற்றி விநியோகிக்க செய்ததையும் கண்ட சென்னை மாகாண அரசாங்கம் சதி திட்டம் தீட்டி கம்யூனிஸ்ட் தலைவர்களையும் ஊழியர் களையும் டிசம்பர் மாத இறுதியில் கைது செய்தது.

சுமத்தப்பட்ட குற்றம் என்னவென்றால் தோழர் பி.இராமமூர்த்தியும் வேறு சிலரும் கட்சி அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு இதர தொழிற்சங்க தலைவர்களை கொலை செய்ய திட்ட மிட்டதாகவும், இதை முனியாண்டி என்ற ஜட்கா வண்டிக்காரர் கேட்டதாகவும் குற்றப்பத்திரிக்கை யில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தான் மதுரை சதி வழக்கு. இந்த சதிவழக்கு எட்டு மாதங்கள் நடைபெற்றது. ஜட்கா ஓட்டுநர் முனியாண்டியை நீதிமன்றத்தில் தோழர் பி.ஆர். குறுக்கு விசாரணை செய்த பொழுது கதறி அழுது பொய் சாட்சி என்று ஒப்புக்கொண்டார். 1947 ஆக்ஸட் 14-ல் அனைவரும் விடுதலையாகினர்.

1947 செப்டம்பர் 18 அன்று "சங்கரய்யா - நவமணி "திருமணம் நடைபெற்றது. கலப்பு திருமணம்,வெவ்வேறு சாதிகள், வெவ்வெறு மதங்கள் 73 ஆண்டுகளுக்கு முன்பே ஜாதி மத மறுப்பு செய்த சமூக புரட்சியாளர் தோழர் என்.சங்கரய்யா.

1948.ல் கட்சி மீது தடையும், தாக்குதலும் துவங்கிய காலம். தோழர் சங்கரய்யா கல்கத்தாவில் இருந்து திரும்பியதும் தனது பணியை தலைமறைவாக செய்து வந்தார். 1951-ம் ஆண்டின் துவக்கத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். 6 மாத சிறைவாசத்திற்கு பின் சங்கரய்யா விடுதலை செய்யப்பட்டார்.

1951-ம் ஆண்டின் இறுதியில் இந்தியாவின் முதல் பொது தேர்தல் துவங்கி 1952-ம் ஆண்டின் துவக்க காலத்தில் முடிவடைதாக இருந்தது.

இந்த தேர்தலில் மதுரையில் தோழர் பி.இராமமூர்த்தி வெற்றி பெற்றார். வேடசந்தூரில் வி.மதனகோபால் வெற்றி பெற்றார். பசும்பொன் முத்துஇராமலிங்கத்தேவர் இரண்டு தொகுதி களிலும் வெற்றி பெற்றார்.

1953-ல் நவம்பர் மாதம் 22 முதல் 26 வரை கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தோழர் சங்கரய்யா மாநில செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டார். 1957-ல் மதுரை கிழக்கு தொகுதியில் முதன்முறையாக போட்டியிட்டு வெற்றிபெற இயலவில்லை. இந்த காலக்கட்டத்தில் தான் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்தில் தத்துவார்த்த மாத ஏடு ஒன்றை துவங்கியது. "ஜனசக்தி " மாத இதழ் பெயரில் வெளிவந்த அந்த ஏட்டின் பொறுப்பாசிரியராக சங்கரய்யா செயல்பட்டார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கருத்து மாறுபாடு அகில இந்திய அளவில் உச்சகட்டத்தில் இருந்த நேரத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் டெல்லியில் கூடிய தேசிய கவுன்சில் கூட்டத்தில் இந்தக்கருத்து மாறுபாடு முற்றி கட்சி உடைந்தது. அதே ஆண்டு அக்டோபர் 30-ல் ஏழாவது கட்சி காங்கிரஸ் கல்கத்தாவில் நடைபெற்றது. தொழிலாளி வர்க்கத்தின் போர்குணம் மிக்க கட்சியாக மார்க்சிஸ்ட் கட்சி உருவானது.

ஆனால் மத்திய காங்கிரஸ் அரசாங்கம் கம்யூனிஸ்ட்டுகளை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கேரள மாநிலம் திருச்சூரில் மத்தியக்குழு கூட்டத்திற்கு டிசம்பர் 29 அன்று வந்த தலைவர்களை கைது செய்தது. தமிழகத்திலும் சங்கரய்யா உள்ளிட்ட தலைவர்களை கைது செய்து கடலூர் சிறையில் அடைத்தனர். 16 மாத சிறைவாசத்திற்கு பின் விடுவிக்கப்பட்டார்.

1963-ம் ஆண்டின் துவக்கத்தில் தோழர் சங்கரய்யா உள்ளிட்ட தலைவர்கள் சிறையில் இருந்த போது மார்க்சிய லெனியத்தை உயர்த்தி பிடிக்கும் நோக்கோடு "தீக்கதிர்" வார ஏடு வெளிவர துவங்கியது. துவக்கத்தில் அப்பு என்கிற அற்புதசாமி ஆசிரியராக இருந்தார். 1966-க்கு பின்பு சிறையில் இருந்து வெளிவந்த தலைவர்கள்

தீக்கதிர் வார ஏட்டை கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடாக அறிவிக்கப்பட்டு என். சங்கரய்யா அதன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1967-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதியிலும் 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 11 ஆண்டுகால சட்டமன்றத்தில் தோழர் என்.எஸ். நிகழ்த்திய உரைகள், விவாதங்கள் அற்புதமானவை.

1995.ம் ஆண்டில் கட்சியின் மாநிலச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். 2002 பிப்ரவரி மாதம் வரை அப்பொறுப்பில் இருந்தார்.

விவசாயிகள் சங்க தலைவராக, அகில இந்திய பொதுச்செயலாளராக, தலைவராக பணியாற்றிய ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று விவசாயிகளின் பேரணியில் பங்கேற்றுள்ளார்.

தோழர் என்.சங்கரய்யா தனது கருத்துக்களை எழுத்தாளர்களுடன் பகிர்ந்து கொள்வார். எழுத்தாளர்களை அவர்களது படைப்புக்களுக்காக உற்சாகப்படுத்துவார். குறிப்பாக மனிதநேய கருத்துக்களை வலியுறுத்தும் கதைகளையும், படைப்புகளையும் மிகவும் பாராட்டி பேசுவார்.

திமுகவின் மறைந்த தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதி தான் எழுதிய "தாய்" கவிதை நூலுக்கு சங்கரய்யா முன்னுரை தரவேண்டுமென்று கேட்டுக் கொண்ட பொழுது, சங்கரய்யா அதை மகிழ்ச்சியுடன் எழுதிக்கொடுத்தார்.

தோழர் என்.சங்கரய்யா அவர்கள் தனிப் பண்புகளில் ஒன்று தோழர்களை சந்திக்கும் பொழுது அவர்களுடைய குடும்பத்தினர் நலம் குறித்து விசாரிப்பதாகும். ஒருவரை சந்திக்கும் பொழுது அவர்களுடைய பெற்றோர், பிள்ளைகள், மற்றும் உடல் நலம் குறித்து விரிவாக கேட்பார். அடுத்த முறை அந்த தோழரை சந்திக்கும் பொழுது அவரை நினைவில் வைத்து விசாரிப்பார்.

ஏகாதிப்பத்திய எதிர்ப்பு போராட்டத்தில் மாணவ பருவத்தில் இருந்து ஈடுபட்டு தொழிற்சங்கம், விவசாய சங்கம், கட்சிப்பணி என பல்வேறு பொறுப்புகளை சிறப்புற ஆற்றியவர் தோழர் என். சங்கரய்யா.

பொது வாழ்க்கைக்கு முன்னுதாரண மானவர். எளிமைக்கு எடுத்துக்காட்டானவர். மார்க்சிய தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். கூட்டங்களில் பேசுகின்ற பொழுது சோசலிசம் வென்றே தீரும் அதைவிட மனிதகுல மீட்சிக்கு வேறு வழியே கிடையாது என்று சூளுரைப்பார்.

புது டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு நூலகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தார் "வாய்மொழி வரலாறு என்ற தலைப்பில் " பிரபல சுதந்திர போராட்ட நினைவலைகளை பதிவு செய்து வைத்துள்ளனர். தோழர் என். சங்கரய்யாவின் சுதந்திர போராட்ட நினைவுகளும் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது.

1964.ல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சாட்சியை உருவாக்கிய 32 நவமணிகளில் இன்றும் நம்மோடு வாழும் தலைவர்களில் இருவர் உள்ளனர். ஒருவர் என்.சங்கரய்யா மற்றொருவர் வி.எஸ். அச்சுதானந்தன்.




தொகுப்பு
**எஸ். இராஜேந்திரன்**
ஆதாரம் என்.இராமகிருஷ்ணன் எழுதிய
என். சங்கரைய்யா வாழ்க்கையும் இயக்கமும்



# மின்வாரிய செயல்பாடும்! தணிக்கை துறை அறிக்கையும்!

சுதந்திரத்திற்கு பின்பு 1950-51 -ம் ஆண்டுகளில் மின்சார உற்பத்தி தமிழகத்தில் 156 மெகாவாட்டாக இருந்தது. ஆனால் கடந்த 64 ஆண்டுகளில் 5 ஆண்டுதிட்டங்கள் மூலம் 1990-ம் ஆண்டுவரை நிதி ஒதுக்கீடு செய்து நிர்மானம் செய்யப்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் மின் தேவையை பூர்த்தி செய்து வந்தது.

நவீன தாராள மயக்கொள்கைகள் அமல்படுத்தப்பட்ட 1990-ம் ஆண்டுக்கு பின்பு அதிக அளவில் மின் உற்பத்தியில் மாநில அரசு கவனம் செலுத்தவில்லை. மின்சாரத்துறையில் தனியாரை ஈடுபடுத்துகின்ற மின்சார சட்டம் 2003-ல் அமலான பின்பு பெருமுதலாளிகள் மின் உற்பத்தியில் ஈடுபட துவங்கினார்கள்.

**அதிமுக ஆட்சியின் சாதனை**

தனியாரிடம் மின்சாரத்தை கொள்முதல் செய்வதில் தமிழகத்தை ஆண்ட அதிமுக அரசு அதிக அக்கறை காட்டியது. 2011-12-ம் ஆண்டுகளிலிருந்து மின்சாரத்தை ரூ.19,325/- கோடிக்கு வாங்கிய மின்வாரியம், மின் வாரியத்திற்கு சொந்தமான உற்பத்தி திட்டங்களில் கவனம் செலுத்தாமலும் ஆமை வேகத்தில் மின் உற்பத்தி திட்டங்கள் நடந்த காரணத்தினாலும் 2019-20 ஆம் ஆண்டுகளில் ரூ.44,182/- கோடிக்கு மின்சாரத்தை வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதற்கு ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கையே காரணம். மின்வாரிய நிர்வாக சீர்கேட்டால் 13176 கோடி இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்கிறது தணிக்கைத்துறை.

சொந்த மின் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் தனியாரிடம் அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்ததன் விளைவாக இன்றைக்கு தமிழக மின்வாரியம் நிதி சுமையில் சிக்கி ரூ.1.51 லட்சம் கோடி கடனில் தள்ளியது தான் அதிமுக அரசின் சாதனை.

**அதிக விலைக்கு மின் கொள்முதல்**

தனியாரிடத்தில் மின்சாரத்தை வாங்குவதற்கு நீண்டகால ஒப்பந்தம், குறுகிய கால ஒப்பந்தம், நடுத்தரகால ஒப்பந்தம் என மூன்று வகைகளில் ஒப்பந்தம் செய்கிறார்கள். இதில் நீண்ட கால கொள்முதல் (LTOA) ஒப்பந்தம் மூலம் குறைந்த விலைக்கு மின்சாரத்தை வாங்குவதற்கு பதிலாக 15 ஆண்டுகளுக்கு அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்ய அதாவது ஒரு யூனிட் மின்சாரம் ரூ.7.00 முதல் ரூ. 12/- வரை கொள்முதல் செய்துள்ளனர்.

நடுத்தர கால ஒப்பந்தம். (MTOA) மூன்றாண்டுகளிலிருந்து 5 ஆண்டுகள் வரை ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.5.50/- பைசா வரை மின்சாரத்தை கொள்முதல் செய்துள்ளது.

அடுத்து குறுகிய கால ஒப்பந்தம் (STOA) என்பது அவசரத் தேவையையொட்டி மின்சாரத்தை விற்பனையாளர்களிடம் ரூ.5.50/- பைசா என்ற

அதிகபட்ச விலையில் வாங்கியது. சந்தையில் மின்சார விற்பனையாளர்கள் குறைந்த விலைக்கு மின்சாரத்தை வழங்க இருந்தும் அதிக விலைக்கு கொள்முதல் செய்ததன் விளைவு கூடுதல் செலவாக கடும் நிதிச்சுமையில் தள்ளப்பட்டு நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**தனியாரிடம் அதிக விலைக்கு..**

ஜி.எம்.ஆர். பவர் கார்ப்பரேசனிடம் மின்சாரத்தை கொள்முதல் செய்ய ஒப்பந்த காலம் 2014-ம் ஆண்டில் முடிவடைகிறது. ஆனால் இந்த கம்பெனி 2013 டிசம்பரில் மேலும் ஓராண்டுக்கு மின்சாரத்தை விநியோகிக்க விண்ணப்பித்தது. மின்சார வாரிய நிர்வாகம் 12.02.2014 அன்று மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு இந்த கம்பெனியிடம் இருந்து மின்சாரத்தை வாங்குவதற்கு முறையீடு செய்தது. ஆனால் பிப்ரவரி 2014-ல் மின்சார வாரியம் தாக்கல் செய்த மனுவை பிப்ரவரி 2015-ல் ஒழுங்கு முறை ஆணையம் இந்த அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்ய வேண்டாம் என ஓராண்டு கழித்து கூறியது. ஆனால் இடைப்பட்ட ஓராண்டு காலத்தில் 737.40 மெகாவாட் மின்சாரத்தை ரூ.824.77/- கோடிக்கு சராசரியாக ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.12.74/- என்ற வகையில் கொள்முதல் செய்து விட்டது மின்வாரியம். அப்பொழுது சந்தையில் ஒரு யூனிட் மின்சாரம் ரூ.3.39 முதல் ரூ.5.42 வரை மின்சாரத்தை விற்பனை செய்ய இதர கம்பெனிகள் தயாராக இருந்தும் அதிக விலைக்கு வாங்கியதன் மூலம் ரூ.424.42/- கோடி இழப்பு ஏற்பட்டது. இது ஒரு நவீன ஊழல். தனியார் கம்பெனி ஆதாயம் அடைய மக்களின் வரிப்பணம் வாரி இரைக்கப்பட்டுள்ளது.





**பங்குதாரர்களாக உள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்தில் மின்சாரம் வாங்க மறுப்பா?**

வள்ளூரில் தேசிய அனல் மின் உற்பத்தி கழகமும் (NTPCL) தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து 1500 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தை 50:50 சதவீதத்தில் நிறுவியுள்ளது. இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் ஒரு யூனிட் ஒன்றுக்கு ரூ.5.10 என விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ரூ.2500/- கோடியை 12 சதவீத வட்டியில் கடன் வாங்கி முதலீடு செய்து அங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை வாங்காமல் இருப்பது மின்வாரியத்திற்கு இழப்பீட்டை உருவாக்கியது.

அதே போன்று நடுத்தர கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கு மின் கொள்முதல் செய்ய நேஷனல் எனர்ஜி டிரேடிங் அண்டு சர்வீசஸ் என்ற கம்பெனியிடம் 100 மெகாவாட்டிற்கு ஒரு யூனிட் மின்சார விலை ரூ.4.88.க்கும், ஜிண்டல் பவர் கம்பெனியிடம் 200 மெகாவாட்டிற்கு ஒரு யூனிட் மின்சாரம் ரூ. 4.92-க்கும் அதானி எண்டர் பிரைசஸ் நிறுவனத்திடம் 200 மெகாவாட் மின்சாரம், ஒரு யூனிட் ரூ.4.99 பைசாவிற்கு வாங்க ஒப்பந்தம் காணப்பட்டது. ஆனால் ஜிண்டல், அதானி நிறுவனங்கள் மின் வாரியத்திற்கு 2013 மே வரை மின்சாரத்தை வழங்கவில்லை. இதனால் மின் தேவையையொட்டி 1 யூனிட் மின்சாரம் ரூ.5.50 பைசாவிற்கு இதர விற்பனையாளர்களிடம் வாங்கியதன் மூலம் ரூ. 1055/- கோடி நிதி இழப்பு ஏற்பட்டது.

**ஊழியர்கள் சம்பளம் நிதி நெருக்கடிக்கு காரணமா?**

ஆனால் ஊழியர்களுடைய சம்பளம் ஊதிய உயர்வு, போன்றவற்றாலும் நிதிச்சுமை ஏற்பட்டது என தெரிவிப்பது பொருத்தமல்ல! 2010.11-ம் ஆண்டில் வாரியத்தின் வருமானம் ரூ.22101.07 கோடி இதில் ஊழியர்களின் சம்பளம், ஒய்வூதியம் என்ற வகையில் ரூ.3707.03/- கோடி செலவு

செய்யப்பட்டுள்ளது. அதாவது மொத்த வருவாயில் 2010-11 ஆம் ஆண்டில் ஊழியர் நலனுக்காக செலவு செய்தது. 16 .77 சதவீதம் மட்டுமே அதே போல 2019-20 ஆம் ஆண்டில் வாரியத்தின் வருவாய் ரூ. 66745.89/- கோடி இதில் ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலவு செய்த தொகை 9.307.94/- கோடி அதாவது 13.94 சதவீதம் மட்டுமே. மொத்த வருமானத்தில் 13.94 சதவீதம் ஊழியர்களின் நலனுக்காக செலவு செய்துள்ளது. வாங்கிய கடனுக்காக வட்டியாக செலுத்திய தொகை கடந்த 2010-11 ஆண்டில் ரூ.3591.15/- கோடியில் ஆரம்பித்து 2019-20-ம் ஆண்டுகளில் ரூ.8674.78/- கோடியாக உயர்ந்திருக்கிறது.

ஆனால் 42,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்களில் களப்பிரிவில் 23,000 காலிப் பணியிடங்கள் இருந்தும் கடந்த 2010-11-ம் ஆண்டுகளில் 203, 704 மின் மாற்றிகளில் 16.756 மின் மாற்றிகள் பழுதடைந்துள்ளது. அதாவது 8.22 சதவீதம் ஆனால் 2019.20-ல் 3,27,163 மின் மாற்றிகளில் பழுதானது 11,524. அதாவது 3.52 சதவீதம் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணியில் தான் இந்த சாதனையை அடைய முடிந்தது. கடந்த 2009- 10-ம் ஆண்டில் மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை 2.03,87,599 ஆகும். ஆனால் 2019-20 ஆண்டுகளில் 3,07,54,018 கோடியென உயர்ந்துள்ளது. பதவி உயர்வு கிடைத்தும் பலனை அனுபவிக்க முடியாத கணக்கீட்டு பிரிவு, களப்பிரிவு ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணியால் தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதற்கிடையில் தான் கஜா, வர்தா, சென்னை வெள்ளம், கஜா, ஒக்கி, நிகர் போன்ற புயல் மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில் தமிழக முழுவதும் மின்தடை பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்தடையை நீக்கி, மின் விநியோகத்தை சீரமைத்து குறுகிய நாட்களில் இந்தப்பணியை செய்து அரசுக்கு பெருமை சேர்த்தவர்கள் எங்களது மின் ஊழியர்களே.

ஆனால் மின் கொள்முதலிலும், மின் உற்பத்தி திட்டங்களிலும் நடைபெற்ற முறை கேடுகளினால் ஏற்பட்ட இழப்புகளுடன் ஊழியர்கள் நலன் சம்பளம், பென்சன் போன்றவற்றை பொருத்துவது சரியல்ல.

அரசின் பொதுத்துறையான மின் துறையில் இழப்பீடு செய்வதும் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதும் பெருமுதலாளிகள் மின் கொள்முதலில் லாபம் அடைய செய்வதும் ஒரு வகையில் நவீன ஊழலே!

தரமான மின்சாரம், தடையில்லா மின்சாரம், மக்கள் வாங்கும் விலையில் மின்சாரம் என்ற கோஷத்தோடு மின்துறையை பொதுத்துறையாக பாதுகாக்க தற்போதைய தமிழக அரசு முன்வர வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

**- எஸ். இராஜேந்திரன்**

## கழிவுகளை நீக்குவது ஆரோக்கிய வாழ்வின் சிறப்பு

மரங்களில், செடிகளில், பயிர்களில் தேவையில்லாதவற்றைக் கழித்தல் (களை எடுத்தல்) அவை செழித்து வளர்வதற்குக் காரணமாயிருப்பது போல்,

வீட்டுக்குள் குப்பை சேர்த்து கொண்டு வாழமுடியுமா?

ஏன் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்கிறோம்? அதனால் நோய் வரும் என்று சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக் கொள்கிறோம்.

உடலின் வெளி சுத்தத்தை பின்பற்றுவது போல் உடலின் உள் உறுப்புகளின் சுத்தத்தை பின்பற்றுவது இல்லை.

உடல் ஆரோக்கியத்திற்கு உள்ளிருக்கும் கழிவுகளை அகற்றுவதற்கு பதிலாக நச்சு கழிவுகளை கொடுத்து ஆரோக்கியத்தை கெடுப்போம்.

உடலின் நோய் தொந்தரவுகளுக்கு காரணம் கழிவுகள் தேக்கமாகும்.

இதனால் உள் உறுப்புகளின் இயக்க சக்தி குறைந்து நோயை தோற்றுவிக்கிறது . அக்குபங்சர் சக்தியை தூண்டி சிகிச்சை அளிப்பது அக்குபங்சர் மருத்துவம்.

ஆனால் உடலின் இயக்கச் சக்தியை அழிக்கும் மருந்துகளை உட்கொள்வோம்.

மனம் சுத்தப்படுவதற்கு உடலாலும் உள்ளத்தாலும் உள்ள தீய எண்ணங்களின் கழிவுகளை நீக்குவது.

உங்கள் உடலுக்கும் , மனதிற்கும் ஏற்ற நன்மையானவற்றை உண்ணுங்கள்.

உங்கள் உணவே கழிவுகளா இருந்தால் உடலும், மனமும் கெடும்.

**ஆரோக்கியத்திற்கான வழிமுறைகள்**

* பசித்து சாப்பிடுங்கள் * உடலுக்கு ஆரோக்கியமான உணவை சாப்பிடுங்கள்.

* தாகத்திற்கு தண்ணீர் மட்டுமே குடிங்கள் * இரவு உணவை விரைவாக உண்ணுங்கள்.

* இரவு சீக்கிரம் தூங்குங்கள்.



*

# மின்வாரியம்




# அகவை - 65

சிறு, சிறு மின்சார கம்பெனிகளாக இருந்ததை எல்லாம் ஒன்றாக இணைத்து 01.07.1957-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் என்ற பொதுத்துறை நிறுவனம் உருவாக்கப்பட்டது. 01.07.2021 அன்று மின்வாரியத்திற்கு வயது 65. மின்வாரியம் 2010 -ம் ஆண்டு மூன்றாக ( TNEB Ltd, Tangedco, Tantransco) பிரிக்கப்பட்ட பிறகும் இன்றுவரை பொதுத்துறையாகவே நீடித்து வருகின்றது. மின்சார சட்ட மசோதா 2000-ல் வந்த பின்பு 2003-ல் மின்சார சட்டம் உருவாக்கப்பட்டு மின்துறையில் தனியார் துறையை உள்ளே நுழைக்க செய்த மத்திய அரசின் நடவடிக்கைகளை மத்திய அமைப்பு தனியாகவும், JAC மூலமாகவும் EEFI மற்றும் NCCOEE மூலமாகவும் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் செய்து மின்வாரியத்தை பொதுத்துறையாகவே காத்து வருகின்றோம்.

**தமிழக மின்வாரியத்தின் வரலாறுகள்**

★ சர்ஜான் கென்ரிகோவார்டு என்ற பிரிட்டன் நாட்டை சேர்ந்த பொறியாளரால் 1933-ம் ஆண்டு பைக்காரா நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. அதன் நிறுவுதிறன் 70 MW

★ தமிழகத்தின் முதல் தெர்மல் நிலையம் 1971-ம் ஆண்டு எண்ணூரில் அமைக்கப்பட்டது. அப்போது அதன் நிறுவு திறன் 60 MW. அதன் பிறகு படிப்படியாக உயர்த்தப்பட்டு அதன் அதிக பட்ச நிறுவு திறனாக 450 MW ஆக உயர்ந்தது.

**மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள நீர்மின் நிலையங்கள்**

மேற்கு தொடர்ச்சி மலைகளில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள குந்தா, பைக்காரா, வால்பாறையில் அமைந்துள்ள காடம்பாறை, மோயார், பவானி போன்ற நீர்மின் திட்டங்கள் 1960-களில் துவங்கப்பட்டது. மின்வாரியத்தின் துவக்க கால வளர்ச்சி திட்டங்களாக இவை இருந்தன. இந்த திட்டங்கள் அமைப்பதிலும் அதன்பின் உற்பத்தியிலும் மின் ஊழியர்கள், பொறியாளர்கள் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இதை நிறுவுகின்ற போது எண்ணற்ற ஒப்பந்த, நிரந்தர ஊழியர்கள் விபத்து மற்றும் விலங்குகளால் மரணமடைந்த வரலாறு மின்வாரியத்தின் வரலாறு என்பதை மறக்க முடியாது, மறுக்கவும் முடியாது.

இப்படி படிப்படியாக உயர்ந்து 16,500 MW மின் திறன் உற்பத்தியை மின்வாரியம் 01.01.2021-ல் அடைந்துள்ளது. 90,000 ஊழியர்கள், பொறியாளர்கள், அதிகாரிகள், 3 கோடியே 10 லட்சம் மின் நுகர்வோர்கள் என மின் வாரியம் இன்று ஆலமரமாக வளர்ந்துள்ளது.

விவசாயிகளுக்கு, ஒரு குடிசை ஒரு விளக்கு திட்டங்களுக்கு இலவச மின்சாரம், சிறு குறு தொழில், பள்ளிகள், ஆலயம் போன்றவற்றிற்கு மானிய விலையில் மின்சாரம் என மின்வாரியத்தின் பணி தொடர்கின்றது. அரசின் பல்வேறு சலுகை விலையிலான மின்சாரம் வழங்கப்படுவதால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும், தொழில் வளர்ச்சி அடையவும் மின்துறை மிகவும் பயன்பட்டு வருகின்றது.

மின்வாரியத்தில் பணி செய்து ஓய்வு பெற்றோர் எண்ணிக்கை 1 லட்சம். பென்சன் கிடைக்காமல் 01.07.1986-க்கு முன்பாக பணி ஓய்வு பெற்ற களப்பணி ஊழியர்கள் பல ஆயிரம்

பேர். மின் வாரியம் என்ற பொதுத்துறை நிறுவனத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சி, சமூகத்தில் நன்மதிப்பு மற்றும் வறுமையில் இருந்து மீண்ட குடும்பங்கள் பல ஆயிரம் .

மின்வாரியம் என்ற பொதுத்துறை மூலம் 70,000-க்கும் மேம்பட்ட ஒப்பந்த ஊழியர்களின் வாழ்க்கையில் விளக்கு ஏற்றப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான ஆரம்ப நிலை பதவிகளில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக சமூக நீதி கோட்பாடு அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக சமூகத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள் பயன் பெற்று அவர்கள் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக உயர்த்தப்பட்டுள்ளனர். அவர்களின் குழந்தை களுக்கு கல்வியும், வேலை வாய்ப்பையும் பெற மின்வாரியம் என்ற பொதுத்துறை மிகவும் பயன்பட்டுள்ளது.

மின்வாரியத்தின் 65 ஆண்டுகால வரலாற்றில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சார கம்பிகளை கொண்டு சென்று மின்சாரம் வழங்கிய பெருமை ஊழியர்கள் பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உண்டு என்று என பெருமையோடு சொல்வோம். மின்சாரம் இல்லாத கிராமங்கள் இல்லை என உறுதியாக சொல்ல முடியும். தமிழக தொழில் வளர்ச்சியில் மின்வாரியத்தின் பங்கும், மின் வாரிய ஊழியர்கள் பங்கும் மகத்தானது. அப்படிப்பட்ட மகத்தான பணி என்பது மின் வாரியம் பொதுத்துறையாக இருந்த காரணத்தினாலே சாத்தியமானது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் ஆட்சிகள் மாறினாலும் மின்வாரியத்தின் சாதனைகள் தொடரவே செய்தன. ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் என்பது இந்தியாவில் முதன் முதலாக 1989-ல் தமிழகத்தில் தான் துவங்கப்பட்டது. அதன் பிறகே பஞ்சாப் போன்ற பல மாநிலங்கள் நம்மை பார்த்து பின்பற்ற துவங்கின என்பது வரலாறு. இதன் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட துவங்கின என்பதும் மறுக்க முடியாது.

மத்திய பாஜக ஆட்சிக்கு வந்தவுடன் பொதுத்துறைகளை தனியாருக்கு கொடுத்தே தீறுவேன் என்று செயல்படுகின்றது. இரயில்வே, வங்கி, எண்ணெய் நிறுவனங்கள், நிலக்கரி வரிசையில் மின்சாரமும் உள்ளது. புதிய வேளாண் சட்டங்களை ரத்து செய்யவும், மின்சார சட்டம் 2020 திரும்ப பெறவும் டெல்லி விவசாயிகள் 210 நாட்களுக்கும் மேலாக போராடி வருகின்றனர். அண்ணல் டாக்டர் அம்பேத்கர் இந்திய சமூகம் மேம் படுவதற்காக இயற்றிய சட்டங்களை யெல்லாம் பாஜக அரசு மனுவின் சட்டங்களாக மாற்ற முயன்று வருகின்றது. 65 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் பெற்ற சலுகைகளையும், உரிமைகளையும் பறிக்கும் அரசாக உள்ள பாஜக ஒன்றிய அரசை எதிர்த்து ஓரணியில் நின்று போராடும் காலமிது. பொதுத்துறைகள் மட்டுமல்ல நம்மை நாம் பாதுகாப்பதும் நமக்கு பிறகான நமது சந்ததி களுக்கான வாய்ப்புகளை தக்கவைப்பதும் இன்றைய அவசிய தேவையாகின்றது.

மின்வாரியம் 65 வயதை அடையும் இந்த நாளில் மத்தியில் 44 சட்டங்களை 4 சட்ட தொகுப்புகளாக மாற்றி சட்டமியற்றி அதை அமலாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு வேகமாக செய்து வருகின்றது. இந்த ஆண்டு 2021-ல் தொழிலாளி வர்க்கமும், விவசாய தொழிலாளி வர்க்கமும் இணைந்து ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தொழிலாளி விரோத நடவடிக்கைகளை எதிர்த்து மிகப்பெரிய அளவி லான போராட்டங்களை செய்திட வேண்டியுள்ளது. அனைவரும் ஒரே அணியில் திரள வேண்டிய கட்டாய சூழலும் ஏற்பட்டுள்ளது.

எனவே மின் ஊழியர்களாகிய நாம் மின்வாரியம் அகவை 65 என்று பெருமை பட்டாலும் அது அகவை 100,200 என்று கொண்டாட வேண்டும் என்று நினைப்போம். அதற்காக ஒன்றிணைவோம். தேவைப்படின் போராட்ட களம் கண்டு மின்வாரியத்தை பாதுகாப்போம்.

**- தி.ஜெயசங்கர்**



# ஒப்பந்த ஊழியர்களுக்கு வேலைதர மறுத்த தாம்பரம் கோட்ட நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்



சென்னை தெற்கு வட்டம்-2, தாம்பரம் கோட்டம், சேலையூர் பிரிவில் பணி செய்து வந்த ஒப்பந்த ஊழியர் திரு.கணேஷ் என்பவர் 27.05.2021 அன்று மாலை 5.30 மணியளவில் மின் தடை நீக்க பணி செய்த போது மின்சாரம் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பிறகு 03.06.2021 அன்று சிகிச்சை பலனின்றி இறந்தார். இவர் ரூ. 3000/-க்கு AE சேலையூரில் மாத சம்பளத்திற்கு வேலை செய்து வந்தார். இவர் மட்டுமல்ல இவரை போன்ற பலர் அவரிடம் வேலை செய்து வந்தனர். அதே நேரம் அவர் எந்த ஒப்பந்த ஊழியரும் வேலை செய்யவில்லை என்ற சத்திய வாக்கு மூலத்தை நிர்வாகத்திற்கு மாதா மாதம் அளித்து வந்தார். இவர் மட்டுமல்ல தெற்கு சென்னை வட்டம் -1,2 மட்டுமல்ல தமிழகம் முழுவதும் அனைத்து அதிகாரிகளும் அளிக்கும் பொய் வாக்குமூலத்தை அவரும் அளித்தார்.

இறந்த கணேஷின் உடலை வாங்க மறுத்து இழப்பீட்டு தொகை ரூ.15 லட்சம் அளிக்க வேண்டும் என்று மண்டல செயலாளர் ஏ.முருகானந்தம், வட்ட செயலாளர் அன்பழகன் அவர்கள் தலைமையில் வட்ட நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியில் 11 லட்சம் ரூபாய் அளிப்பது என்று முடிவானது. அன்றே 6 லட்சம் ரொக்கமாக அளிக்கப்பட்டது. மீதமுள்ள 5 லட்சம் வாரியத்திடமிருந்து பெற்று தர வேண்டும் என்று சமரசம் செய்து முடிக்கப்பட்டது. இதையொட்டி தெற்கு சென்னை-2 வட்டம் வாட்ஸ் அப்பில் போட்ட போஸ்டரால் கோபமடைந்து அதிகாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து தாம்பரம் கோட்டத்தில் பணியாற்றும் 192 ஒப்பந்த ஊழியர்களையும் பணிக்கு வர வேண்டாம் என்று துரத்தியது. இது தொடர்பாக மண்டல செயலாளர் ஏ. முருகானந்தமும், வட்ட செயலாளர் டி. அன்பழகன் அவர்களும் கோட்ட, திட்ட நிர்வாகங்களோடு நடத்திய பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒப்பந்த ஊழியர்கள் வேலையின்றி தவித்தனர். அதன் பிறகு மீண்டும் ஜுன் மாதம் 23 அன்று மாலை 4 மணிக்கு தாம்பரம் கோட்ட செயற்பொறியாளரோடு மத்திய அமைப்பின் தலைவர் தி.ஜெயசங்கர் பேச்சுவார்த்தை நடத்திட ஒப்புக் கொண்டு செயற்பொறியாளர் பேச்சுவார்த்தைக்கு வராமல் திட்டமிட்டு தவிர்த்தார். எனவே அங்கு கூடியிருந்த நிர்வாகிகள், செயற்பொறியாளர் வரும்வரை களையமாட்டோம் என்று காத்திருக்கும் போராட்டத்தை துவங்கினர். நமது போராட்டத்தின் வீச்சை கண்ட பிறகு தாம்பரம் கோட்ட செயற்பொறியாளர் இரவு 8.00 மணிக்கு பேச்சுவார்த்தைக்கு அதிகாரிகளோடு வந்தார்.

பேச்சுவார்த்தையின் இறுதியாக ஒப்பந்த ஊழியர் அனைவருக்கும் வேலை வழங்குவது என்றும், அனைத்து பிரிவுகளுக்கும் K2 ஒப்பந்த முறை மூலம் விரிவாக்க பணிகள், மேம்பாட்டு பணிகள் செய்வது என்றும் அதில் ஒப்பந்த ஊழியர்களுக்கு EPF, Insurance பிடித்தம் செய்ய வேண்டும் என்றும் முடிவானது. உபகோட்ட அளவில் K2 ஒப்பந்தகாரர் பில் போட்டு AE மூலமாக ஒப்பந்த ஊழியருக்கு சம்பளம் அளிக்கும் புறவழி கொள்ளை முறையை ஒழிக்க வேண்டும் என்றும் முடிவானது. இறுதியாக SE South - 2 அலுவலகத்தில் மீண்டும் இருதரப்பினரும் பேசி இந்த முறையை அமலாக்கம் செய்ய வேண்டும் என்று முடிவானது.

நமது கோரிக்கைகள் ஏற்கப்பட்டதால் இரவு 8.45 மணிக்கு போராட்டம் முடிவுக்கு வந்தது. அடுத்த நாள் முதல் ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் பணிக்கு சென்றனர்.

இது நமது போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

**- தி.ஜெயசங்கர்**

# கணக்கீட்டாளர்கள் 4000 காலிப்பணியிடங்களால் வசூல் பணியில் தேக்கம் – நடவடிக்கை எடுக்குமா நிர்வாகமும்,அரசும்..!

மின்வாரியத்தில் வருவாய் பணியை மின் கணக்கீடு செய்தும், வசூல் செய்தும் கொடுக்கின்ற மிக முக்கியமான பணியை கணக்கீட்டு ஊழியர்கள் செய்து வருகின்றனர். மின்வாரியத்தின் வருவாயை தடையில்லாமல் செய்து வரும் பணியை கணக்கீட்டாளர்கள் செய்து வருகின்றர். இந்த நிலையில் கணக்கீட்டு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதற்கு முக்கிய காரணம் 4000 கணக்கீட்டாளர்கள் காலிப்பணியிடங்கள் உள்ளதே.

காலிப்பணியிடங்கள்....

| | | |
|---|---|---|
| 1. | கணக்கீட்டாளர் (அசசர்) | 4000 |
| 2. | கணக்கீட்டு ஆய்வாளர் (IA) | 130 |
| 3. | வருவாய் மேற்பார்வையாளர் ( RS) | 700 |
| | **மொத்தம்** | **4830** |

மொத்தம் 4830 காலிப்பணியிடங்களை வைத்துக் கொண்டு பணி செய்தால் கணக்கீட்டு பணியை முழுமையாக செய்ய முடியாது. ஏற்கனவே கொரானா நோய் தொற்று காலத்தில் கணக்கீடு பணிகள் நடைபெறாமல் சராசரி/ மினிமம் வசூல் செய்யப்பட்டது. வாரியத்திற்கு வரவேண்டிய வருவாய்கள் முழுமையாக வராமல் நிலுவையில் உள்ளது. மின்வாரியத்தின் மிக முக்கியமான பணி கணக்கீடு செய்வதும், வசூல் செய்வதும் தான். இதில் சுணக்கம் ஏற்பட்டால் மின்வாரியத்திற்கு வருகின்ற வருவாய் மிகுந்த காலதாமதமாகும். எனவே வாரியமும், அரசும் கணக்கீட்டாளர் காலிப்பணியிடங்கள் 4000 உடனே நிரப்பிட வேண்டும். ஏற்கனவே வாரிய அறிவிக்கையில் 1300 கணக்கீட்டாளர்கள் என்பதை 4000 என்ற எண்ணிக்கையாக உயர்த்திட வேண்டும். அவ்வாறு புதிய பணி நியமனங்களை செய்தால் மட்டுமே வாரியத்தின் வருவாயை தடையில்லாமல் பெறமுடியும். நுகர்வோர் குறைகள் வராமல் தவிர்க்க முடியும்.

ஏற்கனவே கணக்கீட்டாளர் காலிப் பணியிடங்களில் கணக்கீட்டு ஆய்வாளர்கள் பதவி உயர்வு பெற்ற பின்பும் கணக்கீட்டு பணியும், வசூல் பணியும், மற்ற பணிகளையும் செய்து கூடுதல் வேலை பளுவோடு பணி செய்து வருகின்றனர். இதனால் இவர்கள் மனஉளச்சலுக்கு ஆளாகி கடுமையான மனஅழுத்தத்தில் வேலை செய்து வருகின்றனர். கணக்கீட்டு பிரிவிலுள்ள பிரச்சனையின் ஆழத்தை கணக்கில் கொண்டு கணக்கீட்டாளர் 4000 காலிப்பணியிடங்களை உடனே நிரப்பிட வாரியம் விரைந்து நடவடிகக்கை எடுத்திட வேண்டும் என்பதே நமது கோரிக்கையாகும்.

தற்போது பொறுப்பேற்றுள்ள புதிய தமிழக அரசு தேர்தல் வாக்குறுதியாக 3 லட்சம் அரசு காலிப்பணியிடங்களை நிரப்புவோம் என்று அறிவித்துள்ளது . புதிய அரசு இரண்டு மாதங்களை கடந்த பிறகு அதன் தொடக்கம் சிறப்பாக அமைந்துள்ளது என்று அனைவரும் பாராட்டுகின்றனர். புதிய அரசு பொறுப்பேற்றதும் கொரானா இரண்டாவது அலையின் தாக்கத்தை சமாளிக்க வேண்டிய கட்டாய சூழல் அரசுக்கு உள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம். இருப்பினும் மின்சார வாரியத்தில் உள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவது என்பது மிக முக்கிய தன்மை வாய்ந்தது என்பதை நாம் குறிப்பிட விரும்புகிறோம். ஏனெனில் மின்சாரம் அனைத்து தொழில்களுக்கும் தாய் தொழில் போன்றது. எனவே தாய்தொழில் அனைவருக்கும் மின்சாரத்தை தடையில்லாமல் அள்ளிக்கொடுக்கும் அட்சய பாத்திரமாக இருக்க வேண்டும். அப்படி இருக்க வேண்டுமானால் மின்சாரத்துறையில் உள்ள அனைத்துக் காலிப்பணி இடங்களையும் நிரப்பிட வேண்டும். அதிலும் குறிப்பாக கணக்கீட்டுப் பகுதியில் உள்ள 4000 கணக்கீட்டாளர் பதவிகளை விரைவாக நிரப்பிட வேண்டும்.

அது மட்டுமின்றி வாரிய காலிப் பணியிடங்களை நிரப்புவதால் படித்து வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலை அளிக்கும் சமூக கடமையும் நமக்கு இருக்கின்றது என்பதையும் வாரியத்தின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். ஆட்சி பொறுப் பேற்றிருக்கும் புதிய அரசு நமது கோரிக்கைகளை பரிசீலிக்கும் என்று நம்புவோம்.

**- தி.ஜெயசங்கர்**



# ஒன்றுபட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி!

முந்தைய அதிமுக ஆட்சி காலத்தில் சங்கராபுரம் சமயநல்லூர், புளியந்தோப்பு, சென்னை தலைமையிடம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட 230 கே.வி. துணை மின் நிலையங்களை இரண்டாண்டுகளுக்கு இயக்கவும், பராமரிக்கவும் தனியாருக்கு ரூ.93.67 லட்சத்திற்கு அனுமதி அளித்தது. மின்சார சட்ட திருத்த மசோதா கொள்கை ரீதியாக எதிர்ப்பதாக கூறி பின்வாசல் வழியாக துணை மின் நிலையங்களை தனியாரிடம் ஒப்படைக்க திட்டம் தீட்டியது.

பல கட்டங்களிலும் மின்வாரிய தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம், தர்ணா என அனைத்து வழிகளிலும் போராட்டம் நடத்தியும் அப்போதைய மின்வாரிய தலைவருடனும் அப்போதைய அதிமுகவின் மின்துறை அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு எட்டப்படவில்லை. மாறாக தனியார் மயத்தை நோக்கியே முந்தைய ஆட்சியாளர்களின் பயணம் இருந்தது.

மின்வாரியத்தின் இந்த நடவடிக்கை படிப்படியாக அனைத்து துணை மின் நிலையங்களிலும் தனியாரை நோக்கி செல்லும் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வுகளும், பொறியாளர்களின் பதவி உயர்வுகளும், படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்புகளும் பறிபோகும் அவலநிலையை உணர்ந்த மின் ஊழியர் மத்திய அமைப்பு அனைத்து சங்கங்களையும் ஒன்றிணைத்து 2020 டிசம்பர் 21-ல் தமிழகம் முழுவதும் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போரா ட்டத்தை நடத்தினோம்.

அதே நாளில் சென்னையில், சென்னை கிளைகளின் ஆதரவோடு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குவிந்தனர். மின்வாரிய வரலாற்றில் தொழிற்சங்கங்களின் வரலாற்றில் நடைபெற்ற இந்த போராட்டம் அன்றைய ஆளும் அதிமுக அரசை பணிய வைத்தது. மின்துறை அமைச்சர் போராட்டம் துவங்கிய சில மணி நேரத்திலேயே வாரிய தலைமை அலுவலகத்திற்கு வந்து ஐந்து துணை மின் நிலையங்களை பராமரிக்க தனியாரிடம் ஒப்படைத்த உத்தரவுகளை திரும்பப் பெறுவதாக அறிவிக்க வேண்டிய நிலையை தொழிற்சங்கங்களின் ஒன்றுப்பட்ட போராட்டத்தால் சாதிக்க முடிந்தது.


சரித்திரம் படைத்த சாதனைப் போராட்டத்தின் விளைவாக ஐந்து துணை மின் நிலையங்களுக்கு பதவிகள் அனுமதிக்க கேட்டுக் கொண்டோம். ஆனாலும் அப்போதிருந்த வாரிய தலைவரால் இந்த பதவிகள் அனுமதிக்க அவருக்கு மனம் வரவில்லை. தனது பணிக்காலத்தில் தன்னால் இடப்பட்ட உத்தரவை அவரை வைத்தே ரத்து செய்து விட்டனர் என கடும் கோபத்திலும், ஆத்திரத்திலும், பதவிகளை நிரப்ப அனுமதிக்க வில்லை.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய மின்வாரிய தலைவர் நியமிக்கப்பட்ட பின்பு நாம் தொடர்ச்சியாக இந்த துணை மின் நிலையங்கள் உட்பட அனைத்து இடங்களுக்கும் பதவிகளை அனுமதிக்க வலியுறுத்தி வந்தோம்.

தற்போது மின்வாரிய நிர்வாகம் சமயநல்லூர் மற்றும் தலைமையிட 230 கே.வி. துணை மின் நிலையத்திற்கு பதவிகள் அனுமதித்துள்ளது. இது தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி.

இந்த பதவிகளை அனுமதித்த வாரிய தலைவர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் மத்திய அமைப்பின் சார்பாகவும், தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாகவும், நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த வெற்றியை 21.12.2020-ல் போராட்டக்களத்தில் பயணித்து ஒருநாள் ஊதியத்தை இழந்த மின்வாரிய ஊழியர்களுக்கும், அதே போல போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு அளித்த பொறியாளர்களுக்கும் உரித்தாக்கு கின்றோம்.



தமிழகத்தின் அன்னிபெசன்ட்!

# போராளி மூவலூர் இராமாமிர்தம்

தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெண், சமூக சீர்திருத்தவாதி, எழுத்தாளர், பெண் விடுதலைக்கு போராடியவர், சுயமரியாதை திருமணங்களை நடத்தியவர், விதவை மறு மணத்தை ஆதரித்தவர். மூட நம்பிக்கைக்கு எதிரான போராடியவர், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர், தேவதாசி முறை ஒழிய வீரம்மிக்க போராட்டம் நடத்தியவர். இத்தனைக்கும் சொந்தக்காரர், பல களப் போராட்டங்களை நடத்தி பெண்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தியவர் மூவலூர் இராமாமிர்தம்.

இந்த காலக்கட்டத்தில் கூட பெண்கள் வீதியில் இறங்கி போராட இல்லத்திலும், சமுதாயத்திலும் பல போராட்டங்களை நடத்தி தான் வெளியில் வந்து போராட முடிகிறது. ஆனால் 100 ஆண்டுகளுக்கு முன்பாக சமரசமின்றி போராடி சவாலான வாழ்க்கை வாழ்ந்து சாதித்துள்ளார். மூவலூர் இராமாமிர்தம் அப்படிப்பட்ட போரா ளிகளின் வாழ்க்கை வரலாற்றை நாம் நினைவு கூர்ந்து கவனிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். 27.06.1962 அவரின் நினைவு தினம் ஆகும்.

திருவாரூர் மாவட்டத்தில் கீரனூர் கிராமத்தில் பிறந்து, மூவலூர் கிராமத்தில் வாழ்ந்தவர் இதனால் தான் இவர் மூவலூர் இராமாமிர்தம் என்று அழைக்கப்படுகிறார். வறுமையில் வாழ்ந்த இசைவேளார் குடும்பம் ஒன்றில் கிருஷ்ணசாமி சின்னம்மாள் தம்பதியருக்கு 1883-ல் பிறந்தார் இராமாமிர்தம் குடும்ப வறுமையின் காரணமாக ஒரு தேவதாசியிடம் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டார்.

தேவதாசி என்பவர்கள் கோயில்களில் நடனமாடுவதற்கும், கோவில் பணிகளில் ஈடுபடவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக குறிப்பிட்ட சமூகப் பெண்களை திருமணம் செய்து கொள்ள விடாமல் பொட்டுக்கட்டும் வழக்கம் இருந்தது.

தேவதாசி முறையில் ஒரு பெண்ணுக்கு பொட்டுக்கட்டுதல் என்பது பல்வேறு சடங்குகளை கொண்டு நிகழ்த்தப்பட்டுள்ளது. பெண்களை மனுசி என்று மதிக்கப்படாமல் ஏதோ கோவிலுக்கு நேர்த்திக் கடனாக செலுத்தும் ஆடு, கோழிகளைப்போல கோவில்களில் நடன மாடுவதற்கு சிறுவயதிலேயே பெண்களை நேர்ந்து வழிப்பட்டனர். கோவில் பணிகளுக்கான என்று கூறினாலும், அரசர்களும், செல்வந்தர்களும் தவறாக பயன்படுத்தி வந்ததாக வரலாறு கூறுகிறது. காலங்காலமாக பெண்களை அடிமைகளாக இந்த சமுதாயம் வைத்திருக்றிது.

இப்படிப்பட்ட சூழலில் தமது 17வது வயதில் இராமாமிர்தம் அவர்களுக்கு கோவிலில் பொட்டுக்கட்டுதல் நடத்த வளர்ப்புத்தாய் முடிவு செய்தார். இராமாமிர்தம் தாசி வளர்த்த பெண்ணாக இருந்தாலும் வெளியூரைச் சார்ந்தவர் என்பதால் உள்ளூர் தாசிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். நல்ல விசயம் பொட்டுக்கட்டுதல் நின்று விட்டதே என்று அளவு கடந்த மகிழ்ச்சியாக இருக்கும் போது வளர்ப்புத்தாய் 65 வயது முதியவருக்கு திருமணம் செய்ய முயற்சி செய்தார்.

இராமாமிர்தம் அம்மையார் தடைகளை மீறி வெளியே வந்து தமக்கு இசை கற்றுக்கொடுத்த ஆசிரியரை திருமணம் செய்து வாழ முடிவு செய்து, சடங்கு சம்பிரதாயங்கள் தவிர்த்து ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை என்று உறுதிமொழி எடுத்து வாழத்தொடங்கினார்.

தேவதாசி முறை கட்டுப்பாட்டை உடைத்து வெளியே வந்த முதல் பெண் மட்டுமல்ல, தேவதாசி முறை ஒழிக்க போராட்டங்களில் ஈடுபட்டவர், தேவதாசி பெண்களை அழைத்து பேசி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியவர். இதனால் ஊர் பெரியவர்கள், அரசியல்வாதிகள் என்று பலரும் அவருக்கு எதிரியானார்கள். பெண்ணை எந்த விதத்திலும் கொடுமை செய்தனர்.

ஆனாலும் அவர் ஒரு சமூகம் கடவுளின் பெயரால் இழிவு வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை வாழ்நாள் முழுவதும் போராடி வாழ்ந்தவர். உயிரே போனாலும் தாசியாகவும் மாட்டேன், பாட்டன் வயதில் இருக்கும் கிழவனையும் மணக்க மாட்டேன் என்று வெளியே வந்து போராளியாக மாறியவர்.

1919-ம் ஆண்டு மகாத்மா காந்தி காங்கிரஸ் கட்சிக்கு தலைமை ஏற்றபோது பெண்களும் அக்கட்சியில் சேர்ந்து பணியாற்றினர். இராமாமிர்தம் அவர்களும் காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு, அந்த காலக்கட்டத்தில் முதல் பெண் பேச்சாளராகவும் விளங்கினார்.

பின்பு பெரியாருடன் இணைந்த சுயமரியாதை இயக்கத்திலும், 1949-ம் ஆண்டு அறிஞர் அண்ணா திமுகவை ஆரம்பித்த போது திமுகவிலும் இணைந்து செயல்பட்டவர்.

1936-ம் ஆண்டு இவரது சுயசரிதை புதினமாக தாசிகளின் மோசவலை, தாசிகளின் அவலநிலையை, வேதனையை, தெளிவாக எழுதியிருந்ததால், அவரது எழுத்து மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வும், தேவதாசி முறையை ஒழிக்க அவர் மேற்கொண்ட தொடர் பிரச்சாரங் களுமே சென்னை தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேற வழிவகுத்தது.

அம்மையார் இராமாமிர்தம் அவர்களின் நீண்ட போராட்டத்தின் காரணமாகவே 1942ல் ஆண்டு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வராக தவி ஏற்றவுடன் தேவதாசி முறை ஒழிப்புச்சட்டம் உருவாக்கப்பட்டது. தேவதாசி முறை முற்றாய் ஒழிக்கப்பட்ட அதிக பங்காற்றியவர்.

அதுமட்டுமல்ல காந்தியடிகள் ஒத்துழை யாமை இயக்கத்திலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு கதராடையை சுமந்து தெருத்தெருவாக விற்றதோடு, தானும் கதர் ஆடையையே அணிந்தார். அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றபோது அதில் கொடி பிடித்து செல்லக்கூடாது என்று வெள்ளையர்கள் திடீர் உத்தரவு பிறப்பித்தனர். கொடி பிடித்தால்தானே தடைசெய்வாய் நான் கொடியையே புடவையாக உடுத்திக்கொள்கிறேன் பார் என்பது போல் கொடிகளை இணைத்து புடவையாக அணிந்து கொண்டு ஊர்வலத்தில் வந்தபோது அம்மையாரை கண்டு மிரண்டு வெள்ளை அரசு திகைத்து நின்றது.

இதே போல் மற்றொரு முறை காங்கிரஸ் மேடையில் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது. அப்போதும் அம்மையார் தன் பாணியில் மேடையில் ஒரு கரும்பலகையை வைத்து அதில் தான் பேச வேண்டியவைகளை எழுதி காட்டியே பிரச்சாரம் செய்துள்ளார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் மகாத்மா காந்தி, பெரியார், திரு.வி.க., அறிஞர் அண்ணா என்று பெரிய தலைவர்களின் நம்பிக்கைக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர் போராட்ட களத்தில் துணை நின்றவர்.

1989-ம் ஆண்டு கலைஞர் கருணாநிதி ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித்தொகை வழங்க முடிவு செய்த போது அதற்கு அம்மையாரின் பெயரையே மூவலூர் இராமாமிர்தம் நினைவு திருமண உதவித்திட்டம் என்று பெயரிட்டு வழங்கப்பட்டு இன்றும் தொடர்கிறது.

புதிய சமுதாயத்தை உருவாக்கும் கனவுடனும், வீரத்திடனும் போராடிய சமரசமில்லா போராளி மூவலூர் இராமாமிர்தம் அவர்கள் 27.06.1962-ல் தமது 75-ம் வயதில் மறைந்தார். தமிழகத்தின் அன்னிபெசன்ட் என்ற அறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டார்.

பெண் உரிமைக்காக பாடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த பெண் சீர்திருத்தவாதியாக இருந்த மூவலூர் இராமாமிர்தம் அவர்களின் வரலாறு போதுமான அளவில் அறியப்படவில்லை என்பது வேதனையான நிகழ்வு.

போராளிகள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள். இவர் போன்ற போராளிகள் வாழ்க்கை வரலாறு எதிர்கால சமுதாயத்திற்கு, சமுதாய சிந்தனையோடு இயக்கங்களுக்கு வருபவர்களுக்கு சிறந்த பாடமாக அமையும்.

அவர்தம் நினைவு நாளில் அவரின் போராட்ட குணங்களை மனதில் நிறுத்தி களம் காண்பதே அவருக்கு நாம் செலுத்தும் இதய அஞ்சலி.

**வாழ்க மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்**
**வளர்க அவரின் புகழ்**

- தஞ்சை தனலட்சுமி




# ஒன்றிய பாஜக அரசின் வரிவிதிப்புக் கொள்(கை)ளை...

இந்த ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதியன்று ஒன்றியநிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த போது, வள்ளுவரின் ஒரு குறளை மேற்கோள்காட்டிப் பேசியிருந்தார்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" என்பதே அந்த குறள்.

ஆனால், வள்ளுவர் இன்னொரு குறளையும் இயற்றியிருக்கிறார்.

அந்த குறள் (552) "வேலொடு நின்றான் இடுஎன்றது போலும் கோலொடு நின்றான் இரவு". இதன்பொருள் ஆட்சியிலிருப்போர் தன் மக்களிடம் அநியாயமாக வரி கேட்பது வழிப்போக்காளர்களிடம் ஆயுதத்தைக் காட்டி பணத்தை பறித்துக் கொள்வதற்குச் சமம் என்பதாகும். ஒன்றிய அரசின் வரிக்கொள்கை வள்ளுவனின் மேற்சொன்ன குறளுக்கு ஒப்பானதாகவே இருக்கிறது.

வரிவிதிப்பு எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு கம்யூனிஸ்ட் அறிக்கையில் தோழர் மார்க்சும், ஏங்கெல்சும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

கடுமையான வளர்வீத அல்லது படித்தர வருமான வரி ( A heavy progressive or graduated income tax.) அதாவது,கூடுதல் வருமானம் உள்ளவர்களுக்கு கூடுதல் வரி விதிப்பும், குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு அவர்களது வருமானத் திற்கு தகுந்தாற்போல் குறைந்த வரியோ அல்லது பூஜ்ஜிய வரியோ விதிக்கப்பட வேண்டுமென்கிறது.

ஆனால், இந்திய ஒன்றிய அரசுகளின் வரிவிதிப்புக் கொள்கைகள் இதற்கு நேர் மாறாக, ஏழை, எளிய மக்களிடம் வரிவிதிப்பை அதிகரித்துக் கொண்டே பெரும் பணக்காரர்களுக்கு வரியை குறைத்துக் கொண்டு வருகிறார்கள்.

**இரண்டு வகை வரிகள்**

உலகம் முழுவதும் இரண்டு வகையான வரிகள் விதிக்கப்படுகின்றன. ஒன்று, நேரடி வரி. இன்னொன்று மறைமுக வரி. நேரடி வரி என்பது தனி மனிதர்கள் செலுத்தும் வருமானவரி மற்றும் பெருநிறுவனங்கள் செலுத்தும் வரி, சொத்துவரி போன்றவை. மறைமுக வரி என்பது, பொருட்கள் அல்லது சேவைகளின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

அதாவது, ஒரு பொருளையோ அல்லது சேவையையோ பெறுகிற ஒருவர் அவற்றின் விலை அல்லது கட்டணத்தின் மீது கூடுதலாக செலுத்துவது, அனைவரும் செலுத்துகிற வரியாகும். அதாவது, நேரடி வரி என்பது கார்ப்பரேட் நிறுவனங்களும் வருமான வரி கட்டுகிற அளவுக்கு சம்பளம்பெறுவோரும், பெருமளவுக்கு சொத்து வைத்திருப்பவர்களும் கட்டுவது.

மறைமுக வரி என்பது ஏழை, எளிய மக்கள் உட்பட அனைவரும் கட்டும் வரியாகும். பெரு நிறுவனங்களும், சொத்து படைத்தோரும் வருமான வரி கட்டுவோரும் இந்தவரியை குறைப்பதற்காக குறிப்பிட்ட முதலீடுகள் சேமிப்புகள் உள்ளிட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. சில கடன்கள் பெறும்போதும் வரியில் விலக்குகள் எல்லாம் அளிக்கப்படுகிறது.

ஆனால், மறைமுக வரிகளுக்கு இந்த சலுகைகள் எதுவும் கிடையாது. என்ன வரி விதிக்கப் பட்டிருக்கிறதோ, அது பொருட்களின் விலையோடு சேர்ந்தே வசூலிக்கப்பட்டுவிடுகிறது.

நேரடி வரிகளைப் பொறுத்த வரையில் ஆண்டின் இறுதியில் தான் வசூலிக்கப்படுகிறது. ஆனால், மறைமுக வரிகள் எந்த நிமிடத்தில் ஒருவர் பொருள் அல்லது சேவைக்கான பணத்தைக் கட்டுகிறாரோ அந்த நிமிடத்திலேயே அந்த வரி வசூலிக்கப்பட்டு விடுகிறது.

இந்த பின்னணியில் தான் உலகின் பல நாடுகளிலும் அரசின் வரி வருவாயில் நேரடி வரி அதிகமாகவும், மறைமுகவரி குறைவாகவும் இருக் கின்றன.

ஆனால் இந்தியாவில் இந்த நிலை கொஞ்சம், கொஞ்சமாக மாறி தற்போது நேரடிவரிகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டு மறைமுக வரிகள் அதிகமாக்கப் பட்டிருக்கின்றன. கட்ட மறுப்பவர்களுக்கு நிறுத்தி விடலாமாம்

உதாரணமாக, 2020-21ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் வரிவருவாய் ரூ. 20.16 லட்சம் கோடியாகும். இதில் நேரடிவரி ரூ. 9.45 லட்சம் கோடி. மறைமுக வரி ரூ. 10.71 லட்சம் கோடியாகும்.

அதாவது, சதவிகிதத்தில் சொன்னால் பெரும்பணக்காரர்கள் மற்றும் வருமான வரி கட்டுவோர் அனைவரும் சேர்ந்து கொடுக்கும் வரி 46.87 சதவிகிதமாகவும், ஏழைகள் செலுத்தும் மறைமுக வரி ரூ. 53.13 சதவிகிதமாகவும் இருக்கிறது.

இந்த மறைமுக வரி அதற்கு முந்தை ஆண்டை விட 12 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. ஆனால்,நேரடி வரி பெருமளவு குறைந்திருக்கிறது. இதற்கு மிக முக்கியமான காரணம் 2019 நிதி நிலை அறிக்கையில் பெருநிறுவன வரி 30 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புதிதாக துவங்கப்படும் நிறுவனங்களின் வரி 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஆண்டுக்கு 1.45 லட்சம் கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் குறைவு ஏற்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், தனிநபர் ஒருவர் வரி கட்ட வேண்டிய வருமானம் ரூ. 10 லட்சத்திற்கும் அதிகமாக இருந்தால் அவர் 30 சதவிகிதத்திற்கும் அதிகமாக வரி கட்ட வேண்டும்.

ஆனால், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபம் ஈட்டும் நிறுவனம் 22 சதவிகிதம் வரி கட்டினால் போதுமானது. இதேபோன்று 1975ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட்ட சொத்துவரி 2015ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. அப்படி கைவிட்டதற்கான காரணமாக அப்போதைய நிதியமைச்சர் குறிப்பிட்டது இந்த வகையில் வரும் வரி 1000 கோடி ரூபாய் அளவிற்கு தான் இருக்கிறது. ஆனால் அதை வசூலிப்பதற்கே நிறைய செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதாகும்.

அவருடைய கூற்றின் உண்மை என்னவெனில், சொத்துவரி கட்டக் கூடியவர்கள் முறையாக கட்ட மறுக்கிறார்கள். எனவே, வசூலிப்பதை நிறுத்தி விடலாம் என்பதாகும்.

## கைவிடப்பட்ட வரிகள்

இதேபோன்று, பாரம்பரியமாக பெரும் சொத்து படைத்தோர் அந்த சொத்தை தனது வாரிசுக்கு மாற்றிக் கொடுக்கும் போது, வாரிசு வரி ( Inheritance Tax) விதிக்கப்பட்டு வந்தது. அதுவும் 1985 கால கட்டத்திலேயே கைவிடப்பட்டது. ஒரு பக்கம், பெருநிறுவனங்களுடைய வரி கொஞ்சம், கொஞ்சமாக குறைக்கப்பட்டு 22 சதவிகிதம் என்ற அளவுக்கு கீழே வந்தது. மற்றொரு புறம், பெரும்சொத்து படைத்தோரின் வரிகள் மொத்தமாக கைவிடப்பட்டன.

இத்தனைக்கும் இந்த காலத்தில் தான் பெரு நிறுவனங்கள் மற்றும் மிக உயர்ந்த வருவாய் பிரிவினரின் சொத்துக்கள் தாறுமாறாக உயர்ந்தன. உதாரணமாக, ஆக்ஸ்ஃபார்ம் என்கிற அமைப்பும், கிரிடிட் சுசி என்கிற அமைப்பும் ஆண்டுதோறும் வருவாய் இடைவெளி பற்றிய விபரங்களை வெளியிட்டு வருகிறார்கள்.

2014ஆம் ஆண்டு இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் சொத்து அடிப்படையில் மேலேயுள்ள 10 சதவிகிதம் பேரின் சொத்து மதிப்பு அதாவது, 13 கோடி பேரின் சொத்து மதிப்பு கீழேயுள்ள 70 சதவிகிதம் பேர் அதாவது 90 கோடி பேரின் சொத்து மதிப்புக்கு சமமாக இருந்தது.

இது, 2019ஆம் ஆண்டின் இறுதியில், மேலேயுள்ள ஒரு சதவிகிதம் பேரின் சொத்து மதிப்பு அதாவது 1.30 கோடி பேரின் சொத்து மதிப்பு கீழேயுள்ள 90 கோடி பேரின் சொத்து மதிப்பை போல நான்கு மடங்குக்கும் அதிகமாக மாறிவிட்டது.

இதன் பொருள் என்னவெனில், இந்தியாவில் உள்ள 70 சதவிகிதம் பேரின் சொத்து குறைந்திருக்கிறது என்பதும், மேலேயுள்ள ஒரு சதவிகிதம் பேரின் சொத்து தாறுமாறாக உயர்ந்திருக்கிறது என்றும் ஆகும்.

இந்த ஐந்தாண்டு காலத்தில் மேலேயுள்ள பணம் படைத்தோரின் சொத்து மதிப்புக்கும், கீழேயுள்ளவர்களின் சொத்து மதிப்புக்கும் 40 மடங்கு இடைவெளி அதிகரித்திருக்கிறது. அதே அமைப்புகளின் கணக்குபடி, இந்தியாவில் உள்ள 63 கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு இந்தியாவில் 2018-19ஆம் ஆண்டு மொத்த பட்ஜெட்டான ரூ. 24,42,200 கோடியை விட மிகவும் அதிகமானது. இதேபோன்று, சம்பளத்திலும் மேலே யுள்ளவர்களின் சம்பளத்திற்கும், அடிமட்டத்தில் உள்ளவர்களின் சம்பளத்திற்கும் மிகப் பெரிய அளவுக்கு இடைவெளிகள் இந்த காலத்தில் அதிகரித்துள்ளன.

ஒரு பெண், வீட்டு வேலை செய்கிறவர், இந்தியாவில் உள்ள ஒரு பெரு நிறுவனத்தில் வேலை செய்யும் தலைமை செயல் அதிகாரி ஒரு வருடத்தில்

பெறும் சம்பளத்தை பெறுவதற்கு 22,277 வருடங்கள் உழைக்க வேண்டும்.

ஒரு தலைமை செயல் அதிகாரி 10 நிமிடத்தில் சம்பளமாக பெறுவதை வீட்டு வேலை செய்யும் ஒரு பெண் பெறுவதற்கு ஒரு வருடம் உழைக்க வேண்டும்.

**இரண்டு வித இந்தியா**

இதேபோன்று, மற்றொரு கணக்கின் படி, கொரோனா கடுமையாக பாதிப்பு ஏற்படுத்திய கடந்த ஆண்டின் இந்திய பணக்காரர்களின் சொத்து மதிப்பு 35 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அதாவது, ரூ. 3 லட்சம் கோடி அதிகரித்துள்ளது. ஆசியா மற்றும் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ள பணக்காரரான முகேஷ் அம்பானி இந்த காலத்தில் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 90 கோடி என்கிற அளவிற்கு அவரின் சொத்து மதிப்பு உயர்ந்திருக்கிறது.

ஆனால்,இதே காலத்து இந்தியாவில் இருக்கும் 24 சதவிகித மக்கள் ஒரு மாதத்திற்கு ரூ. 3 ஆயிரம் அளவிற்கே சம்பாதித்துக் கொண்டிருந்தனர். இந்த காலத்தில் அதிகரித்த முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பை மட்டும் முறைசாரா தொழிலில் உழைத்துக் கொண்டிருக்கும் 40 கோடி தொழிலாளர்களுக்கு கொடுக்க முடியும் என்றால் 5 மாதத்திற்கு அவர்களை வறுமையிலிருந்து மீட்டுவிட முடியும்.

இதேகாலத்தில் இந்தியாவிலுள்ள 100 கோடீஸ்வரர்களின் அதிகரித்த சொத்தை மட்டும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள இந்தியாவின் 13.8 கோடி மக்களுக்கு பிரித்துக் கொடுத்தால், ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 94,045 கொடுக்க முடியும்.

இதே காலத்தில் உணவுக்கு வழியின்றி மக்கள் உயிரிழந்ததை இந்தியா கண்டது. தற்போது இந்தியாவில் குழந்தைகளில் 42 சதவிகிதம் பேர் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். உரிய மருத்துவம் கிடைக்காதோர் ஏராளமாக உள்ளனர்.

இவ்வளவு பெரும்பணக்காரர்கள் அபரிமிதமான சொத்து சேர்த்துக் கொண்டிருந்த இந்த காலத்தில் பெருநிறுவன வரிகளை அரசு குறைத்தது.இது தவிர, 6 லட்சம் கோடி ரூபாய் வராக் கடனை தள்ளுபடி செய்திருக்கிறது. இவை தவிர்த்தும் ஏராளமான உதவிகளை பெருமுதலாளிகளுக்கு அரசாங்கம் தள்ளுபடி செய்து கொண்டே இருக்கிறது.

ஆனால், ஏழை, எளிய மக்களின் மருத்துவத்திற்கு, கொரோனா காலத்தில் பயன்படுத்தும் தடுப்பூசி முதல் ரெம்டெசிவர், ஆக்சிஜன் என அனைத்திற்கும் ஜி.எஸ்.டி. வரி விதிப்பு அரசு கல்லாக் கட்டிக் கொண்டிருக்கிறது. வள்ளுவன் சொன்னது போல, ஈட்டலை ஒன்றிய அரசு செய்கிறது. ஆனால் அது யாரிடம் ஈட்டப்பட்டு, யாருக்கு கொடுக்கப்படுகிறது என்பது தான் முக்கியமான பிரச்சனை.

ஏழை, எளிய, நடுத்தர மக்களிடமிருந்து அநியாயமாக விதிக்கப்பட்ட வரிகளை வசூலித்து இந்தியாவின் ஆகப்பெரும் பணக்காரர்களுக்கு அள்ளிக் கொடுக்கும் சேவையை செய்கிறது.

இந்தச் செயல் வள்ளுவர் சொன்ன"தனியே செல்லும் நபரிடம் ஆயுதத்தைக் காட்டி பொருளை அபகரித்துக் கொள்ளும் செயலுக்கு ஒப்பாகும்".

அரசு நடுநிலையானதோ, அனைவருக்குமானதோ அல்ல. லட்சக்கணக்கான கோடி ரூபாய்கள் சொத்து சேர்ந்துகொண்டிருக்கும் போதே வரியிலிருந்து விலக்களிப்பதும், வாழ்வதற்கும், புசிப்பதற்கும் வழியற்ற மக்கள் நோயால் துன்பத்தில் உழன்றுக் கொண்டிருக்கும் போது அந்த மருந்திற்கும் வரி விதிப்பதும் ஒன்றிய அரசு யாருக்கான அரசு என்பதை புரிந்து கொள்ள உதவும் ஒரு சோற்றுக்கு உதவும் பதமாகும்.

அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள்கை ஏழைகளிடம் பிடுங்கி, எட்டாத உயரத்தில் இருக்கும் பெருநிறுவனங்களுக்கு அள்ளிக் கொடுப்பதாகவே இருக்கிறது.

வர்க்கம்தான் தீர்மானிக்கிறது.

க.கனகராஜ்,

சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர்



# வருந்துகிறோம்

கடலூர் கிளையின் சிறப்பு தலைவரும், நெல்லிக்குப்பம்
கோட்டம் சி.என்.பாளையம் பிரிவின் சிறப்பு நிலை முகவருமான
தோழர். **சி. பாலசுப்பிரமணியன்** அவர்கள்
4.5.2021 அன்று கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த
வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# 200 நாட்களை கடந்த விவசாயிகள் போராட்டம்

சுதந்திரம் அடைந்த போது இந்தியாவின் தொழில் வளர்ச்சி என்பது முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியே இருந்தது. இந்தியா ஒரு எழை விவசாய நாடு என்ற அழைக்கப்பட்டது. இந்தியாவின் மூத்த தொழிலும், முதல் தொழிலும் விவசாயமாக இருந்தது. அன்று மட்டுமல்ல இன்றும் விவசாயம் அதை சார்ந்த தொழில்கள் தான் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் மிக முக்கிய காரணியாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

1991-க்கு பிறகு ஏற்பட்ட உலகமய, தாராளமய, தனியார்மய நடவடிக்கைகளால் இந்திய பெருமுதலாளிகள் மத்தியில் செல்வம் குவியத் தொடங்கியது. எனவே இவர்கள் இலாபம் தரும் அரசு பொதுத்துறைகளை கபளீகரம் செய்ய அரசை நிர்பந்தம் செய்து வந்தனர். அதனால் வங்கி, இன்சூரன்ஸ், ஆயில் நிறுவனங்கள், இரயில்வே, நிலக்கரி, வான்வழி போன்ற அனைத்திலும் தனியார் உள்ளே வர ஒன்றிய அரசு தீவிரம் காட்டுக்கின்றது. இந்தியாவின் முதலாளித்துவம் என்பது ஐரோப்பாவை போல கார்பரேட் முதலாளித்துவத்தை நோக்கி பயணிக்க தொடங்கி விட்டது. அதற்கு மோடியின் ஒன்றிய அரசு அனைத்து வகையிலும் பக்கபலமாக உள்ளது. அனைத்து தொழில்களிலும் அவர்கள் வந்து விட்டனர். அவர்கள் வராத செய்யாத ஒரே தொழில் விவசாயம் தான். அதிலும் கூட 10 ஆண்டு களுக்கு முன்பாக ரிலையன்ஸ் நிறுவனம் ரிலையன்ஸ் பிரஷ் என்ற காய்கறி கடையை திறந்து விட்டது.

2021-ல் இருக்கும் நமது நாடு இந்திய பொருளாதார உற்பத்தியில் (GDP) அதிக சதவிகிதம் விவசாயம் சார்ந்ததாக உள்ளது. விவசாய உற்பத்தி பொருள்களுக்கு சந்தையில் எப்போதும் கிராக்கி உள்ளது. ஏனெனில் மக்களின் நுகர்வு அதிகமாக உள்ளது. எனவே விவசாயத்தில் அடியெடுத்து வைக்க கார்ப்பரேட் முதலாளிகள் விரும்பிய காரணத்தால், அவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் மூன்று வேளாண் சட்டங்கள். எந்த பொருளை உற்பத்தி செய்ய வேண்டும், தரம், ஒப்பந்தமுறை இதில் உள்ள அரசின் சரத்துக்கள் விவசாயிகளுக்கு பாதகமாக இருந்தது. நிவாரணம் கோரி நீதிமன்றம் செல்ல முடியாது என்று பல்வேறு பலவீன சட்ட சரத்துக்கள் அதில் இருந்தது. மேலும் இந்த முறையில் காலப்போக்கில் விவசாயி தனது நிலத்தை அவரிடமே கொடுக்க வேண்டிய நிலை வரும் என்பதால் மூன்று வேளாண் சட்டங்களையும் விவசாயத்திற்கு ஆதரமாக உள்ள மின்வாரியத்தை தனியாருக்கு விடும் சட்டத்தை எதிர்த்தும், விவசாய கூட்டமைப்பின் சார்பாக டெல்லியில் 200 நாட்களை கடந்து ஒன்றிய அரசை எதிர்த்து பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் போராடி வருகின்றனர். உலகிலேயே அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டு நீண்ட நாட்கள் நடக்கும் போராட்டம் இதுதான். இந்த போராட்டம்

உலக முழுவதும் உள்ள வரலாற்று அறிஞர்களால் ஆவணமாக்கி, வரும் அடுத்த தலைமுறைக்கு சொல்லும் போராட்டம் இது என்று சொன்னால் மிகையல்ல.

மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்த விவசாயிகள் போராட்டம் 2018 மற்றும் 2019 ஆண்டு இறுதியில் நடந்த போது 150 விவசாய அமைப்புகள் இருந்தன. அதன் பிறகு இந்தியாவின் பெரும்பகுதி விவசாய அமைப்புகள் 2020-ல் போராட்டத்தில் குதித்தன. அதன் விளைவாக பல லட்சம் பேர் கலந்து கொண்ட போராட்டமாக அது மாறியது. இந்திய ஊடகங்கள் ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறிய காரணத்தினால் இந்த போராட்டம் மூடி மறைக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் சமூக வலைதளங்கள் மூலம் போராட்டத்தை வெளி உலகத்திற்கு காட்டி வருகின்றது போராட்டக்குழு. ஒன்றிய அரசு நடத்திய 12 கட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது. இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று சொன்ன மத்திய மந்திரி மகேந்திரசிங் தோமர் பஞ்சாபில் உள்ளாட்சி தேர்தலில் பிஜேபி மண்ணை கவ்விய பிறகு பேச்சு வார்த்தைக்கு மத்திய அரசு தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார். அடுத்த ஆண்டு டெல்லி, பஞ்சாப், உத்திரபிரதேச மாநிலங்களில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் விவசாயிகள் போராட்டம் பிஜேபிக்கு எதிர் வினையாற்றும் என்று பயம் அவர்களை ஆட்கொண்டுள்ளது. விவசாயிகள் கூட்டமைப்பு துவக்கத்தில் இந்த போராட்டம் 6 மாத தயாரிப்போடு தான் வந்தார்கள். தற்போது அடுத்த சட்டமன்ற தேர்தலில் பாஜகவை தோற்கடிக்கும் வரை இந்த போராட்டம் முடியாது என்று அறிவித்துள்ளனர்.

இந்திய மக்கள் தொகை 130 கோடியில் 110 கோடிக்கு மேல் விவசாயம் அதை சார்ந்த தொழில்களை செய்பவர்கள் தான். நகர்புற வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் அதில் வேலை செய்தாலும் சொந்தமாக 4 ஏக்கர் நிலத்தில் பயிர் வைத்து அதிலிருந்து கிடைக்கும் பொருளை தனக்கு போக மற்றவர்களுக்கு வாங்கும் விலைக்கு விற்பதில் உள்ள சந்தோஷம் எதிலும் வராது. விவசாய பூமியை நம்பியே சிறு, குறு விவசாயிகள் தனது வாழ்க்கை பயணத்தை தொடர்கின்றனர். விவசாயி விளைவிக்கும் பொருளுக்கு அவரால் விலை நிர்ணயம் செய்ய முடியாத அவல நிலையை அரசு மாற்றுவதற்கு பதிலாக கார்ப்பரேட்கள் கையில் விவசாயத்தை கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்கள் மற்றும் மின்சார சட்டம் 2020-ஐ எதிர்த்து விவசாயிகளோடு தொழி லாளர்களாகிய நாமும் இணைந்து போராட வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கும் ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, மின்வாரிய தொழிலாளர்கள், அதிகாரிகள், பொறியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரமிது ஜூன் 26 2021 அன்றோடு 200 நாட்கள் கடந்த விவசாயிகள் போராட்டத்தில் ஜனநாயகம் காப்போம், விவசாயம் காப்போம் என்ற கோஷத்தை முன்வைத்து விவசாயிகள் கூட்டமைப்பு அறை கூவல் விடுத்துள்ளது. இந்த போராட்டத்தில் கடும் குளிரிலும், கடும் மழையிலும், கடும் வெப்பத்திலும் 300-க்கும் மேற்பட்டவர்கள் தனது இன்னுயிரை இழந்துள்ளனர். 70 வயதை கடந்த முதியவர்கள் போராட்ட களத்தில் இருப்பது போராட்டத்தின் வீரியத்தை விவசாயிகளின் எழுச்சியை காட்டுவதாக உள்ளது.

மோடி அரசின் தவறான கொள்கையால் பாதிக்கப்படாத மக்களே இல்லை என்ற சூழலில் ஒட்டு மொத்த இந்திய நாடே போராட்டத்தில் குதிக்கும் நாள் விரைவில் வரத்தான் போகின்றது. 30 ஆண்டுகளுக்கு முன்பாக உங்கள் தகப்பனாரும், எங்கள் தகப்பனாரும் ஒரு விவசாயி தான், நாம் அனைவரும் இன்று தொழிலாளியாக மாறினாலும் விவசாய குடும்பத்தை சார்ந்தவர்கள் தான். இந்தியாவின் மூத்த தொழில் மட்டுமல்ல உலகின் மூத்த தொழிலும் விவசாயம் தான். எனவே விவசாயம் காக்க, ஜனநாயம் காக்க மின்துறை காக்க ஒன்றிணைவோம், போராட்ட களம் கண்டு ஒன்றிய அரசை வீழ்த்துவோம்.

**“போராட்டங்கள் இல்லாமல்
திண்டாட்டங்கள் ஓயாது”**

**- தி.ஜெயசங்கர்**



# அருட் தந்தை ஸ்டான் ஸ்வாமி அடக்குமுறை சட்டங்களால் கொலை




பீமா கொரெகான் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் நண்பர்களும் குடும்ப உறுப்பினர்களுமான நாங்கள் அருடதந்தை ஸ்டான் ஸ்வாமியின் இழப்பினால் உலுக்கப்பட்டு ஆழ்ந்த காயமடைந்திருக்கிறோம். இது ஒரு இயற்கையான மரணமல்ல, ஒரு கனிவான ஆத்மாவிற்கு எதிராக ஒரு மனிதாபிமானமில்லாத அரசு நடத்திய நிறுவன ரீதியான கொலை. வாழ்நாள் முழுவதிலும் ஜார்கண்டின் ஆதிவாசிகளிடையே இருந்து அவர்களுடைய வளங்கள், நிலங்கள் மீது அவர்களுக்கு இருந்த உரிமைக்காகப் போராடிய அருட்தந்தை ஸ்டானுக்கு அவர் நேசித்த ஜார்கண்டிலிருந்து தொலைதுாரத்தில் பழிவாங்கும் உணர்ச்சி மிகுந்த அரசினால் சிறை வைக்கப்பட்ட நிலையில் இப்படி மரணம் நேரந்திருக்கக் கூடாது.

பீமா கொரெகான் வழக்கில் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட 16 பேரில் கடைசியாகக் கைதானவர் அருட்தந்தை ஸ்டான் தான் பார்கின்சன்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 84வயதான அவர் தான் கைது செய்யப்பட்டவர்களின் மூத்தவர். உடல் நிலை மோசமாக இருந்த போதிலும் அவருடைய தார்மீக வலிமையாலும் அசைக்க முடியாத நேர்மையாலும் அனைவருக்கும் உத்வேகம் அளித்தார். சிறையில் அவருடைய உடல் நிலை மோசமடைந்து கொண்டிருந்த போதிலும் சக சிறைவாசிகளைக் குறித்தே அவருடைய எண்ணங்களும் பிரார்த்தனைகளும் இருந்தன. தன்னுடைய கடிதங்ககளில் பல்வேறு வழக்குகளில் போலியாக குற்றம் சாட்டப்பட்டு சிறையிலிருந்தவர்களைப் பற்றி எழுதிய அவர் சமுதாயத்தில் நிலவும் அநீதிகளைக் குறித்து வேதனையில் புழுங்கினார்.

அவருடைய கனிவையும், மனித நேயத்தையும், இரக்க உணர்வையும் நினைத்துப் பார்க்கும் நேரத்தில் அவர் சிறை வைக்கப் பட்டதெனும் மாபெரும் அநீதியை மறக்க முடியாது.

அருட்தந்தை ஸ்டான் போல் வயது முதிர்ந்த நோய்வாய்ப் பட்டிருந்த ஒருவர் சிறையிலடைக்கப்படுவதே அதுவும் கொரோனா தொற்றுக் காலத்தில் நடப்பது, மனசாட்.சிக்கு விரோதமானது.

அக்டோபர் 8, 2020 அன்று அவர் கைது செய்யப்பட்ட போதே அவருக்கு எதிரான விசாரணை முடிவுற்றிருந்தது அவர் ஓடிப் போகும் அபாயம் இல்லை என்பதும் தெளிவு. அதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டதும், நவி மும்பையிலிருக்கும் தஜோலா சிறையில் அடைக்கப்பட்டதும் அவருக்குக் கொடுக்கப்பட்ட மரண தண்டனை போன்றது தான்.

அருடதந்தை ஸ்டான் கைது செய்யப்பட்ட நேரத்தில் மனதை உருக வைக்கும் ஒரு வீடியோ அறிக்கையை வெளியிட்டார். அவருடைய கணிணியிலிருந்து எடுக்கப்பட்ட சில குறிப்பிட்ட ஆவணங்களின் அடிப்படையில் அந்த ஆவணங்களை அவர் அதற்கு முன் பார்த்ததில்லை. தன் கணிணியில் பதியவுமில்லை என்ற போதிலும் அவர் ஒரு மாவோயிஸ்டு சதியில் ஈடுபட்டதாக மென்மையான ஆனால் தெளிவான

குரலில் கூறினார். அந்த ஆவணங்கள் அவருடைய கணிணியில் தொலை துாரத்திலிருந்து திருட்டுத் தனமாக பதியப்பட்டன என்பதை இந்த வருட ஆரம்பத்தில் ஆர்சனல் கச்ல்டிங் என்ற நிறுவனமும், வாஷிங்டன் போஸ்ட் பத்திரிக்கையும் வெளியிட்ட ஸ்தம்பிக்க வைக்கும் உண்மைகள் உறுதிப்படுத்தின.

நெட்வைர் மால்வேர் என்கிற இணையக் கருவியைப் பயன்படுத்தி பீமா கொரேகான் பிரச்சினையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கணிணிகளில் அவர்களை சதியில் தொடர்பு படுத்தும் ஆவணங்களை தொலை துாரத்திலிருந்து பதிந்த முறையையும் அந்த இரு நிறுவனங்களும் விளக்கியிருந்தன. இப்படி தீய நோக்கத்துடன் ஜோடிக்கப்பட்ட ஆதாரத்தின் அடிப்படையிலான குற்றச் சாட்டுக்கு விலையாக அருட்தந்தை ஸ்டான் தன் உயிரைக் கொடுக்க நேர்ந்திருக்கிறது.

சிறையிலடைக்கப்பட்ட பிறகும் கூட அவரது உடன்நிலையைக் குறித்து கவலை கொள்ளாத பொறுப்பற்ற போக்கு தொடர்ந்தது. சிறையில் ஸ்ட்ரா வைத்து உறிஞ்சிக் குடிக்க உதவும் கோப்பையைப் பயன்படுத்தக் கூட அவருக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அடிப்படையான இந்தத் தேவைக்காகக் கூட அவர் நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது. நீதிமன்றமும் விரக்தியடையச் செய்யும் வகையில் மெத்தனமாக நடந்து கொண்டது. பின்னர் அவரது உடன் நிலை தொடர்ந்து சீரழிந்து வந்த போதிலும் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் பிணையில் விடுவிக்குமாறு அவர் செய்த மனுவும் இதே குருட்டுத் தனமான உணர்ச்சிகளற்ற, சொரணையற்ற என்.ஐ.ஏ. நீதிமன்றத்தால் எந்திர ரீதியாக நிராகரிக்கப்பட்டது. அவருக்கு கோவிட் தொற்று இருக்கிறதா என்பது கூட மருத்துவ ரீதியாகத் தீர்மானிக்கப்படவில்லை, உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி அவர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டவுடன் தான் நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மருத்துவக் காரணங்களுக்காக பிணை கோரி செய்த மனுவின் விசாரணையின் போது அவர் தன் மோசமாகி வரும் உடன் நிலை குறித்து நீதிமன்றத்தில் நிகழ்த்திய உருக வைக்கும், இதயத்தை உடையச் செய்யும் உரையை நாம் மறக்க முடியாது.. தான் நீண்ட நாள் உயிரோடு இருப்பேன் என எதிர்பார்க்கவில்லை என்றும், ராஞ்சியிலிருக்கும் பகாய்ச்சவில் வாழும் தன் மக்கள் கூட்டத்துக்கு நடுவே இருந்து இறக்க விரும்புவதாகவும் அவர் பேசினார். இந்த எளிமையான வேண்டுகோளைக் கூட நம் நீதித்துறையினால் நிறைவேற்ற முடியவில்லை என்பது கேவலமானது.

இந்த மதவாத பி.ஜே.பி. அரசின் இரக்கமற்ற மனித நேயமற்ற நடவடிக்கையால் ஸ்டான் ஸ்வாமி அவர்களை மக்கள் இழந்திருக்கிறார்கள்.

பாசிச பா.ஜ.க அரசு எத்தனை குரூரமானது என்பது அருட்தந்தை ஸ்டான் அவர்களின் மரணம் உலகுக்கு உணர்த்தியுள்ளது.

# மத்திய அமைப்பின் சமூக பணிகள் - 02

கொரானா பெருந்தொற்று காலத்தில் நமது கிளைகள் செய்த சமூகப்பணி, பொருளாதார உதவிகள் என தொடர்ந்து செய்து வருவது பாராட்டத்தக்கது, வரவேற்க கூடியது.

**சென்னை மேற்கு கிளை சார்பாக**

1. 19.06.2021 மாலை அம்பத்தூர் சங்க மனையில் கொரானாவால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு அரிசி உள்ளிட்ட மளிகை பொருட்கள் தொகுப்பு வழங்கப்பட்டது. இதில் தோழர் கே. இரவிச்சந்திரன், கே. அருள்செல்வன், தசரதன், கணேஷ்ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
2. திருநெல்வேலி மின் வட்டக்கிளை சார்பாக செவிதிறன் குறையுடையோர், வாய்பேச முடியாதோர், முடித்திருத்தம் செய்வர் என55 குடும்பங்களுக்கு தோழர் வண்ணமுத்து மற்றும் மாவட்ட நிர்வாகிகள் இணைந்து கொரானா நிவாரண பொருட்களை வழங்கினர்.

   ஊடகங்கள், உள்ளூர் தொலைக்காட்சிகள் பாராட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது அவர்கள் பணியை மாநில மையமும் மனதார பாராட்டுகின்றது.
3. சேலம் வட்டத்தில் கொரானா காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு 03.07.2021 அன்று அரசி, மளிகை பொருட்களை தலைவர் கருப்பண்ணன் மற்றும் செயலாளர் ரகுபதி முன்னிலையில் வழங்கப்பட்டது.
4. வடசென்னை அனல் மின்நிலையம் தோழர் வெங்கட்டையா மற்றும் வடக்கு கிளை செயலாளர் தோழர் சத்யமூர்த்தி அவர்கள் இணைந்து 60 நாட்களுக்கும் மேலாக பல்வேறு பகுதிகளுக்கு சாலையோர மக்களுக்கு உணவு மற்றும் அரிசி மளிகை பொருட்களை வழங்கி வருகின்றனர். தொடர்ச்சியாக இவர்கள் செய்யும் பணியை அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள் உள்ளூர் தொலைக்காட்சிகள் பாராட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது,. அவர்கள் பணியை மாநில மையமும் மனதார பாராட்டுகின்றது.

**கல்வித்தகுதி சான்றிதழ் தவறாக கொடுத்த பணியாளர்கள் பணிஓய்வு பெறும் பொழுது போலிச் சான்றிதழ் என கண்டுபிடிக்கப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தஞ்சாவூர் மின் விநியோக வட்டத்திற்கு வழங்கிய தெளிவுரை**

கமுக்கம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நிர்வாகக் கிளை

144, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

குறிப்பாணை எண்.085831/158ஜி.44/ஜி.441/2021, நாள்.15.04.2021

பொருள்: நிருவாகம் - தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் - திரு.K.ஞானசேகரன் மின்பாதை ஆய்வாளர், போலிக் கல்விச்சான்றிதழ் சமர்ப்பித்தது — நடவடிக்கை எடுப்பது தொடர்பாக.

பார்வை:
1. முழுவாரிய நிலை ஆணை எண்.19, (நிருவாகக் கிளை) நாள் 13.07.2005.
2. மே.பொ./தஞ்சை மி.ப.வட்டம் அவர்களது கு.ஆ. எண்.2576/679/நிபி.5/ நி.மே./ நி.உ..1/ கோ.ஓ.ந/ 2020, நாள் 24.09.2020.
3. மே.பொ./தஞ்சை மி.ப.வட்டம் அவர்களது கடித எண்.011195/433/நிபி.2(2)/கோ.ஓய்வு/2020, நாள் 24.12.2020.
4. மே.பொ./தஞ்சை மி.ப.வட்டம் அவர்களது கடித எண்.011195/433/நிபி.2(2)/கோ.ஓய்வு/2020-1, நாள் 06.02.2021.

*****

பார்வை (3) மற்றும் (4)-ல் காணும் மேற்பார்வைப் பொறியாளர்/ தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் அவரது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள திரு. K.ஞானசேகரன் மின்பாதை ஆய்வாளர், அவர்கள் போலிசான்றிதழ் சமர்ப்பித்த குற்றத்திற்காக அவர் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து கீழ்வருமாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

2) வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணி செய்து பணிநிரந்தரம் பெற்றவர்கள் போலிக் கல்விச்சான்றிதழ் சமர்ப்பித்த குற்றத்திற்காக அவர்கள் மீது முழு வாரிய நிலை ஆணை எண்.27, (நிருவாகக்கிளை) நாள் 07.11.2002-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3) திரு.K.ஞானசேகரன், மின்பாதை ஆய்வாளர் அவர்கள் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளியாக பணிசெய்து பணிநிரந்தரம் பெற்றுள்ளதால் அவர் போலிக்கல்விச்சான்றிதழ் சமர்ப்பித்த குற்றத்திற்காக அவருக்கு வழங்கப்பட்ட பார்வை (2)-ல் காணும் மேற்பார்வைப் பொறியாளர்/ தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் அவர்களது இறுதி உத்தரவில் முழு வாரிய நிலை ஆணை எண்.27, (நிருவாகக்கிளை) நாள் 07.11.2002-ன்படி நடவடிக்கை எடுக்கும்படி ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு தண்டனை வழங்கும் முன்பே வயது மூப்பின் காரணமாக அவர் ஓய்வு பெற்றுவிட்டதால் முழு வாரிய நிலை ஆணை எண்.27, (நிருவாகக்கிளை) நாள் 07.11.2002-ன்படி நடவடிக்கை எடுக்க இயலாது என்பதால் மேற்கண்ட தண்டனையை மாற்றி அமைக்கும் பொருட்டு திரு. K.ஞானசேகரன், மின்பாதை ஆய்வாளர் அவர்கள் போலிசான்றிதழ் சமர்ப்பித்த குற்றத்திற்காக எழுத்து துறையில்லாத பணியாளர்களுக்கான நிலையாணைகள் பிரிவு 30(xxvii)-ன்படி குற்றமாக கருதப்பட்டு 31 (1) (v) -ன்படி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 3 ஆண்டுகள் அவரது ஊதிய உயர்வை குறைப்பது என்ற தண்டனையை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவர் கடைசியாக பெற்று வந்த ஊதியத்தில் 3 ஆண்டு ஊதிய உயர்வினை குறைத்து நிர்ணயம் செய்யப்படும் ஊதியத்தை அவரது கடைசி மாத சம்பளமாக (Last Pay Drawn) நிர்ணயம் செய்து. அதன் அடிப்படையில் அவருக்கு வழங்க வேண்டிய ஓய்வுகால பயன்களான (DCRG) உள்ளிட்ட அனைத்து பயன்களையும் வழங்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

4) மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தினை உரிய நகல்களுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தெ.ரவிசந்திரன்
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

பெறுநர் :-
மேற்பார்வைப் பொறியாளர்/ தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்

நகல்:-
தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/திருச்சி மண்டலம்/திருச்சி.

// அனுப்பப்படுகிறது //

ஒப்பம்/-****16.04.2021
(ஆ.நா.ந. அமுதா)
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/தொழிலாளர்.

# ஈரோடு மின்உற்பத்தி திட்ட பணிநேர மாற்றம்
# மத்திய அமைப்பின் தலையீடு

ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் பணியாளர்களின் பணி நேரத்தை மாற்றி முந்தைய மின்வாரிய தலைவர் தன்னிச்சையாக வாரிய ஆணை 104 நாள் 19.05.2021ன் மூலம் உத்திரவு பிறப்பித்திருந்தார் இந்த உத்திரவானது தொழில் தகராறு சட்டத்தின்படி தொழிற் சங்கங்களுக்கு 9 (ஏ) அறிவிக்கை வழங்காமல் அறிவிக்கை செய்தது ஏற்றுக் கொள்ள முடியாது என மின்ஊழியர் மத்திய அமைப்பு தற்போதைய மின்வாரிய தலைவரிடம் தொழிற் சங்கங்களை கலந்து ஆலோசிக்காமல் வழங்கியது சரியல்ல என சுட்டிக்காட்டிய பின்பு மின்வாரிய தலைவர் நமது நியாயத்தை ஏற்றுக் கொண்டு ஏற்கனவே வாரிய உத்திரவு வெளியிட்ட காரணத்தால் தற்போது அனைவரும் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் பணி நேரத்தை மாற்றி தொழிற் சங்கங்களுக்கு வழங்கியுள்ளார்கள் இதன் மீது தொழிற் சங்கங்கள் தங்களது கருத்துக்களை 15 தினங்களுக்குள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்.

**Lr.No. 005703/1441/M.18/M.184/2021-7, dt.08.07.2021.**

To
The General Secretary,
Tamil Nadu Electricity Worker's Federation, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Board Accounts and Executive Staff Union, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Board workers Progressive Union (LPF), Chennai
The General Secretary,
Central Organisation ofTamil Nadu Electricity Employees (COTEE), Chennai
The General Secretary,
Minsara Pirivu Anna Thozhilalar Sangam, Chennai
The General Secretary,
Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Worker's Federation,(2 Groups), Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Board's Engineers' Sangam, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Employees Congress, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Board Thozhilalar PoriyalarAykiyya Sangam, Chennai
The General Secretary,
Tamil Nadu Electricity Board's Engineers' Association.
The General Secretary,
Tamil Nadu Electricity Board Finance and Accounts Officers Association.
The General Secretary,
Bharathiya Electricity Employees Federation, Chennai.
The General Secretary,
Tamil Nadu Electricity Board Card Billing Staff Union, Chennai.
The General Secretary,
Tamil Nadu Electricity Board Engineer's Union and Employees Federation.
The General Secretary,
Tamil Nadu Electricity Board Employees Federation.

Sub: Estt. – Erode Generation Circle – Mettur dam Power House/ Mettur Tunnel Power House in Erode Generation Circle – Change of Timings –on par with other Power Houses in Erode Generation Circle – Revised B.P. –- Reg.

Ref: (PER) CMD TANGEDCO PROCEEDINGS NO.114, Dated:19.05.2021.

***

I am to state that the Borad has approved the proposal to Change of Timings in Mettur dam Power House and Mettur Tunnel Power House in Erode Generation Circle for Provincial (Engineers) (General Shift duty) & RWE Service (General Shift duty) in Mettur Tunnel Power House and Mettur dam Power House vide reference cited as detailed below:-

| The present and modification of working hours for Provincial (Engineers) (General Shift duty) & RWE Service (General Shift duty) in Mettur Tunnel Power House and Mettur dam Power House in Erode Generation Circle | |
|---|---|
| (1) | (2) |
| **Present Working Hours** | **Modification of working Hours** |
| Monday to Friday – Morning 7.00 A.M to 5.00 P.M.<br>Lunch time- 12.00 to 2.00<br>In all Saturdays working Hours- 7.00 A.M to 1.00 P.M | Monday to Saturday – Morning 8.00 A.M to 5.00 P.M.<br>Lunch time- 12.30 to 1.30<br>( All Saturdays are working days) |

2) In this regard, I am to inform that there are 14 Hydro Power station in Erode Generation Circle and out of 14 Hydro stations, the working hours of 12 Hydro Power Houses are as follows:-

| Erode Generation Circle Present working hours of 12 Power Houses | |
|---|---|
| 12 Power Houses | Monday to Saturday – 8.00 A.M to 5.15 P.M.<br>Lunch time- 12.30 to 1.30<br>Second and fourth Saturday Holiday |

3) Now, certain unions have represented to revise the B.P.issued in the reference cited and requested for change the working hours of the above two Power Houses in Erode Generation Circles on par with other Hydro Power stations as detailed below:-

| The present and modification of working hours for Provincial (Engineers) (General Shift duty) & RWE Service (General Shift duty) in Mettur Tunnel Power House and Mettur dam Power House | |
|---|---|
| (1) | (2) |
| **Present Working Hours** | **Modification of working Hours** |
| Monday to Saturday – Morning 8.00 A.M to 5.00 P.M.<br>Lunch time- 12.30 to 1.30<br>( All Saturdays are working days) | Monday to Saturday – Morning 8.00 A.M to 5.15 P.M.<br>Lunch time- 12.30 to 1.30 P.M.<br>(Second and fourth Saturday are Holidays) |

4) After careful consideration of the above request, it has been proposed to modify the working hours of Mettur Tunnel Power House and Mettur Dam Power House as indicated in para 3 above duly revising the orders issued in the reference cited, so as enable to maintain uniform working hours in all Hydro Power Stations in Erode Generation Circles.

5) In this regard, I am to request you to offer your views if any on the above proposal within 15 days , so as to enable TANGEDCO to take a decision in the matter.

**CHIEF ENGINEER/HYDRO** 4/20
8/7/21

Encl:- Copy of the reference cited.

Copy submitted to Secretary TANGEDCO, Chennai-2.

Copy to the Superintending Engineer/ Erode Generation Circle/ Urachikottai.



# நோய் தொற்றுக் காலத்தில் மாணவர்களின் கல்வி நிலைமை

தொற்று நோய் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள புதிய சவால்களைச் சமாளிப்பதற்கான வழிகளை கண்டறிய உலக நாடுகள் முயன்று வருகின்ற இந்த நேரத்தில், கொரோனா தொற்று நோய் மிக பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. இந்த நோய் தொற்று காரணமாக இந்திய அளவில் கல்வி நிலையங்கள் செயல்படாத காரணத்தால் பல கோடி மாணவர்கள் கல்வி கற்பித்தலில் பாதிக்கப் பட்டுள்ளனர்.

தற்போது ஆரம்ப கல்வி நிலையங்கள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை மூடப்பட்டுள்ளன. சில கல்வி நிலையங்கள் மட்டும் ஆன்லைன் மூலம் வகுப்புகள் எடுக்கப்படுகின்ற பணி நடைபெற்று வருகிறது. இந்த வருடமும் கல்வியை மாணவர்களுக்கு கற்பித்தலில் கல்வி நிறுவனங்களும், கல்வியாளர்களும் பெரும் குழப்பத்தில் உள்ளனர்.

தொடர்ச்சியாக மாணவர்களுக்கு கற்பித்தல் பணியை மேற்கொள்ள ஆன்லைன் வகுப்புகள் மிக அவசியமாகி வருகிறது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அனைத்து மாணவ - மாணவிகளும் ஒரே பொருளாதாரப் பின்னணியில் இல்லாமல் இருப்பதால், அனைவருக்கும் ஆன்லைன் வகுப்புகள் கற்பித்தலில் சிரமம் உள்ளது. இதற்கு மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து ஈடுபட வேண்டிய அவசியமும் உள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் இணைவழியாகவும், டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் மூலம் கல்வி கற்பது அத்தியாவசியமான ஒன்றாக மாறிவிட்டது. இது எளிதான விஷயம் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். நீண்டகாலத் திட்டமாக இதை செயல்படுத்தினால் மாணவர்கள் உயர்கல்வி கற்க எளிதான சூழல் உருவாகும் இருப்பினும் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே மாதிரியான கற்பித்தல் சூழலைக் கொண்டிருப்பதில்லை. மாறி வரும் சூழலுக்கு ஏற்ப இணைய வழிக் கல்வியை மேற்கொள்ள கல்வி நிறுவனங்களின் தரம் உயர்த்துவது அவசியம்.

நமது நாட்டை சேர்ந்த மாணவர்கள் உயர் கல்விக்காக வெளிநாடுகளில் கற்க ஆர்வம் காட்டுகிறார்கள். கல்வி கற்க செல்லும் மாணவர்கள் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. கொரோனா தொற்றின் காரணமாக மேலை நாடுகள் இந்திய மாணவர்களுக்கு பல்வேறு நிபந்தனைகளை விதிக்கலாம் இதனால் இந்தியாவிலேயே கல்வி கற்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். நமது அரசு சர்வதேச தரத்திலான கல்வியை வழங்கினால் வெளிநாட்டிற்கு செல்லவேண்டிய மாணவர்கள் இந்தியாவிலேயே கற்கும் சூழல் உருவாகும்.

கொரோனா தொற்றின் காரணமாக பல மாணவ மாணவிகளின் வீடுகளில் நிதி ஒரு பெரும் பிரச்சனையாக உருவாகி உள்ளது. உயர் கல்விக்கான கல்விக் கட்டணத்தைச் செலுத்துவது இந்த காலகட்டத்தில் பலரால் இயலாமல் போகக் கூடும் குறைக்கப்பட்ட கல்விக் கட்டணங்களுடன் கூடிய கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு முழு கவனம் செலுத்த வேண்டும்.

நமது நாட்டிலேயே கூட பல கல்வி நிறுவனங்களில் உயர்தரக் கல்வியை வழங்கி வருகின்ற இந்த காலத்தில் கல்வி முறையில் கற்றல் என்பது இனி தவிர்க்க முடியாததாக மாறிவிடும் பாரம்பரிய கல்வி முறைகளில் இருந்து புதிய தொழில் நுட்பத்துடன் கல்வி கற்றல் அமைய மத்திய மாநில அரசுகள் அவசியம் முயற்சிக்க வேண்டும்.

# ஒப்பந்த தொழிலாளர் செத்தும் கொடுத்தான் சீதக்காதி



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் களப்பணியாளர்கள் காலியாக உள்ள இடங்கள் சுமார் 25,000-க்கு மேல் உள்ளது.

இத்தனை காலியாக உள்ள பணியிடங்களில் உள்ள பணிகளை யார் செய்கிறார்கள் என்ற கேள்வி இயல்பாக எழும்.

புதிய மின் விஸ்தரிப்பு, மின்தடை நீக்குதல் போன்ற பணிகள் எந்த தடையில்லாமல், தற்போது நிலவி வரும் கொரானா பெருந்தொற்றின் காலத்தில் கூட தடையின்றி பணிகள் நடைபெறுகின்றன. இத்தகைய பணிகளை மின்வாரியத்தால் அடையாளம் காண முடியாத பல ஆண்டுகள் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி செய்கிறார்கள். சில ஒப்பந்த தொழிலாளர்கள் K2 ஒப்பந்த அடைப்படையில் பணி செய்கிறார்கள்.

இந்த ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சட்டப்படியான கூலி வரையறையற்றவர்களாக உள்ளனர். இவர்களின் உழைப்புக்கான ஊதியம் மின் நுகர்வோரை சார்ந்தே உள்ளது. இவர்கள் பணி செய்யும் போது விபத்து ஏற்பட்டால் எந்த சட்ட பாதுகாப்பின்றி உள்ளனர்.

மின்வாரியத்தின் ஒப்பந்த தொழிலாளி விபத்துக்குள்ளாவது, மரணம் அடைவது அன்றாட செய்தியாக கடந்து செல்கிறது. மரணம் அடைந்த தொழிலாளி குடும்பத்திற்கு உட்சபட்சமாக தமிழக அரசு முதல்வர் நிவாரண நிதியில் இருந்து ரூ. 3 லட்சம் ரூபாய் மின் வாரியத்திலிருந்து ரூ. 5 லட்சம் கிடைக்கும். முதல்வர் நிவாரண நிதி பெரும் போராட்டத்திற்கு பின்பு மரணமடைந்த ஒப்பந்த தொழிலாளர் மின்சார பணியின் போது தான் இறந்தார் என்ற செய்தி தமிழக அரசு கவனத்திற்கு கொண்டு சென்றால் மட்டும் தான் பணம் கிடைக்கும்.

பல ஒப்பந்த தொழிலாளர்கள் மின் விபத்தால் கை, கால் இழந்து மாற்று திறனாளிகளாக உள்ளனர். மரணமடைந்த தொழிலாளர்களின் குடும்பங்கள் கேட்பார் அன்று நாதியாய் உள்ளனர்.

இவையெல்லாம் வேலை வாங்குகின்ற அதிகாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தெரியும். தெரிந்து இருந்தும் பல ஆண்டுகளாக மின்சார பணிகளை செய்தவர்கள் வேறு பணிக்கு செல்ல முடியாத நிலையில் பணி செய்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் திருநெல்வேலி மின் விநியோக திட்டம் வள்ளியூர் கோட்டம் வடக்கன் குளம் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட தெற்கு வேப்பன்குளம் பகுதியில் 26.05.2021 அன்று HT/LT மின்கம்பத்தில் (LT) மின்வயர் அறுந்து உள்ளது. இதனை சரிசெய்ய, தாழ்வழுத்த (LT) மின் இணைப்பை துண்டித்து விட்டு பணியாற்றும் போது எதிர்பராத விதமாக உயர் அழுத்த (HT) மின் வயர்பட்டு விபத்துக்குள்ளாகி இசக்கியப்பன் (எ) ஆனந்த் என்ற ஒப்பந்த தொழிலாளி படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 01.06.2021 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த செய்தி கேட்ட அவருடன் பணியாற்றிய ஒப்பந்த தொழிலாளர்கள் சுமார் 30-க்கு மேற்பட்டவர்கள் மின் ஊழியர்க மத்திய அமைப்பு CITU பூலுடையார், ராமச்சந்திரன், சுப்பிரமணியன், மற்றும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) பகுதி தலைவர் தோழர் முத்துகுமார் தலைமையில் மத்திய அமைப்பு தலைவர்களின் ஆலோசனையின் படியும் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் கோரிக்கைகள் மத்திய அமைப்பு ஆலோசனைபடி இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் நிவாரணமாகவும் இறந்தவரின் வாரிசுக்கு அரசு பணியும் வழங்க வேண்டும் என்று கோசமிட்டு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்வாரிய அதிகாரிகள் காவல்துறை துணையோடு பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை முடித்து வைக்க முயற்சித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட நம் தோழர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை போராட்டம் வாபஸ் பெறுவதில்லை என உறுதியாக இருந்தனர்.

கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை இறந்த ஒப்பந்த தொழிலாளி உடலை அடக்கம் செய்ய பெறுவதில்லை என எல்லா அச்சுறுத்தலையும் மீறி இறந்தவரின் குடும்பத்தினருடன் தோழர்களின் போராட்டம் 01.06.2021 முதல் 02.06.2021 மாலை வரை நீடித்தது. இந்த செய்தி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இராதாபுரம் சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

பேச்சுவார்த்தையின் முடிவாக மாண்புமிகு சபாநாயகம் தன் சொந்த பணத்தில் 1 லட்சம் ரூபாயும், ஒப்பந்தக்காரர் மின்வாரிய அதிகாரிகள் இணைந்து ஒன்பது லட்சம் ரூபாய் என மொத்தம் 10 லட்ச ரூபாயும், இறந்த ஒப்பந்த தொழிலாளி மனைவிக்கு அரசு வேலை மற்றும் ஒப்பந்தக்காரர் மூலம் இறந்தவர்க்கு இன்சூரன்ஸ் 5 லட்ச ரூபாய்க்கான பத்திரம் ஒப்படைக்கப்படும் என்று உறுதி அளித்ததின் பேரில் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இறந்த ஒப்பந்த தொழிலாளியின் உடன் பிறந்தவர்கள் 3 அக்கா, தந்தை, தாய் வயதானவர்கள் உடல் நலம் குன்றியவர்கள் மற்றும் மனைவி எட்டு மாத கர்ப்பிணியாக உள்ளார். இறந்த ஒப்பந்த தொழிலாளியின் வருவாய் கொண்டே குடும்பம் நடத்த வேண்டிய பரிதாப நிலையில் இருந்துள்ளனர் .

போராட்ட பேச்சுவார்த்தையின் முடிவுபடி இறந்தவர் உடல் பெறப்பட்டு அடக்கம் செய்வதற்கு முன்பாக ஒப்பந்த தொழிலாளியின் தந்தையிடம் தெரிவிக்கப்பட்டது. மகன் இறந்ததை கேட்டவர் சிறிது நேரத்தில் அவரும் மரணமடைந்தார். தந்தை, மகன் இருவரையும் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டது. மனம் பரிதவித்தது.

இறந்த ஒப்பந்த தொழிலாளியின் மனைவி, தாயிடம் மாண்புமிகு சபாநாயகரால் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ரொக்கப்பணம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பெரும் துயரத்திலும் சிறு ஆறுதல் 10 லட்சம் ரூபாய் 5 லட்சம் இன்சூரன்ஸ் பணம், அரசு பணி கிடைக்க ஏற்பாடு செய்தது தான்.

ஒப்பந்த தொழிலாளியே இல்லை என்று சொல்லும் மின்வாரியத்திற்கு ஒப்பந்த தொழிலாளி மரணம் அடைந்தது தான் நிரூபிக்க வேண்டிய துர்பாக்கிய நிலை உள்ளது.

தமிழகம் முழுவதும் இசக்கியப்பன் போன்ற ஒப்பந்த தொழிலாளி குடும்பங்கள் எத்தனையோ பேர் இவர்களுக்கான சட்ட போராட்டமும், உரிமைக்கான ஒன்றுபட்ட போராட்டமே தீர்வாகும்.

வாழும் காலத்தில் தன் வாழ்க்கைக்கு தேவையான பொருளாதாரத்தை இறந்த பின்பு தான் கிடைக்க செய்துள்ளான். இந்த ஒப்பந்த தொழிலாளி இசக்கியப்பன்(எ) ஆனந்த்.

செத்தும் கொடுத்தான் சீதக்காதி.

**- எஸ்.வண்ணமுத்து**

---

# வருந்துகிறோம்



தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மத்திய சென்னை கிளையின் முன்னால் நிர்வாகியும், வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினரும், ஒளிக்கதிர் பத்திரிக்கை கொண்டு வருவதில் முழு ஒத்துழைப்பும், விநியோகிக்கும் பொறுப்பும் திறம்பட செய்தவருமான தோழர் **கே. சண்முகம்** அவர்கள் 8.5.2021 அன்று காலமானார் என்பதை வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம். (மறைந்த கே. சண்முகம் அவர்கள் மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர் தோழர் து. ஜானகிராமன் அவர்களின் மைத்துனர்)

# ஒப்பந்ததாரரால்
# வடசென்னை அனல் II
# மின் நிலைய உற்பத்தி நிறுத்தமா?

திருவள்ளூர் மாவட்டத்தில் 1200 மெகாவாட்டில் வடசென்னை அனல் மின் நிலையம் அலகு 2 அமைக்கப்பட்டு உற்பத்தியை செய்து வருகிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டு மாதங்களாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது. மின்வாரியத்திற்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது மின்சாரத்தை தனியார் முதலாளியிடம் விலைக்கு வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இங்கு சாம்பல் கையாளும் பணியை ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூபாய் ஒரு கோடிக்கு, பணி செய்து வந்த ராதா இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு இந்த முறை ஒப்பந்தம் கிடைக்கவில்லை. OSM என்ற புதிய நிறுவனம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 85 லட்சத்திற்கு ஒப்பந்தம் எடுத்தது.

இதனால் அதிருப்தி அடைந்த ராதா இன்ஜினியரிங் நிறுவனம் ஒப்பந்தம் கிடைக்காத காரணத்தால் அன்று முதல் சாம்பல் பிரிவில் உள்ள உதிரிபாகங்களை கழட்டியும், பழுது ஏற்படுத்தியும், டிசைன்கள் மாற்றியும், மின் உற்பத்தி செய்ய முடியாத வன்னம் பாதிப்பை ஏற்படுத்தினார்கள். DRAWING இல்லாத காரணத்தால் நமது அலுவலர்களால் பழுதுகளை சரிசெய்ய முடியவில்லை. ஏறத்தாழ இந்தப் பணிகள் அனைத்தையும் சரிசெய்து மின் உற்பத்தியில் ஈடுபட இரண்டு மாத காலம் ஆகிவிட்டது. இதனால் மின் வாரியத்திற்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒர்க்ஸ் காண்ட்ராக்ட் என்ற பெயரில் தனியார் பெருமுதலாளிகளிடம் பராமரிப்பு பணிகளை ஒப்படைத்ததால் அவர்களுக்கு இலாபம் கிடைக்கவில்லை என்றாலோ, மின்வாரிய சொத்தை நாசம் செய்வார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. சென்னை ராதா இன்ஜினியரிங் கம்பெனி தூத்துக்குடி, மேட்டூர் போன்றவற்றிலும் ஒர்க்ஸ் காண்ட்ராக்ட் என்ற பெயரில் ஒப்பந்தத்தை எடுத்துள்ளது. ஒப்பந்த ஊழியர்களின் உழைப்பை சுரண்டி லாபம் பார்க்கும் இந்த நிறுவனத்திற்கு அதிகாரிகளின் பரிபூரண ஆசியும் உண்டு.

அரசாணை 950-ன் படி நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் ஒப்பந்த ஊழியர்களை பயன் படுத்தக் கூடாது என்று இருந்தும் அரசின் பொதுத்துறை நிறுவனமான மின்வாரிய நிர்வாகம் ஒப்பந்த ஊழியர்களை அனுமதிப்பது தவறு என்று மின் ஊழியர் மத்திய அமைப்பு பலமுறை சுட்டிக் காட்டியிருந்தோம். அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தினால் அவர்களுக்கு பொறுப்பு (Responsibility) பொருத்த முடியும். இதனால் வாரிய பொருட்கள் பாதுகாப்பதோடு, பணிகளும் நேர்மையாக இருக்குமென மின் ஊழியர் மத்திய அமைப்பு கருதுகிறது.

சமீபத்தில் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மனித உயிர்கள் போனது மட்டுமின்றி, ரூபாய் 100 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. அதே போல தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கொதிகலன் வெடித்து 4 தொழிலாளர்கள் மரணமடைந்ததுடன் பலகோடி ரூபாய் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது.

விபத்துக்கள் இரண்டு விதம், ஒன்று எதிர்பாராமல் நடப்பது, இன்னொன்று செயற்கையாக விபத்தை உருவாக்குவது. ஏனெனில் ஒரு விபத்து நடைபெற்றால் அந்த விபத்துக்கான முழுகாரணத்தையும் ஆராய்ந்து கற்றுணர்ந்து திரும்ப அதே போன்ற விபத்துகள் மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்படாமல் பார்ப்பது தான் நிர்வாக திறமைக்கு எடுத்துக்காட்டு. ஆனால் ஒப்பந்ததாரரை கடவுளாக பார்க்கும் விசுவாசமிக்க அதிகாரிகளால் மின்வாரியத்திற்கு இழப்பீட்டை தான் ஏற்படுத்த முடியும்.

மின்வாரிய பணியாளர்கள் அனைவரும் கொஞ்சம் நேர்மையாக இருந்தாலே, இது போன்ற தவறுகளை சுட்டிக்காட்டுவதோடு விபத்துகள் ஏற்படாமல் தடுக்க முடியும். மின்வாரியம் பொதுத்துறையாக நீடிக்க வேண்டுமென்றால் மின் உற்பத்தி நிலையங்கள் தடங்கல் இல்லாமல் மின் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். இன்றி லிருந்தாவது மாற்றத்தை நோக்கி பயணிப்போம்! நமது மின் வாரியத்தை பாதுகாப்போம்!




# தடைகளை உடைத்து தடம் பதித்த ஆணிசிவா

கேரளாவின் ஆணிசிவா (வயது31) கடந்த ஜுன் 25-ம் தேதி அனைத்து பத்திரிக்கைகளும், ஊடகங்களும் அவரைப்பற்றியே பேசின, அவர் செய்த சாதனை தான் என்ன

கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் ஆணிசிவா கல்லுரியில் முதலாமாண்டு படிக்கும் போதே காதல் வயப்பட்டுள்ளார். காதலிப்பது குற்றமல்ல யாரை காதலிக்கிறோம், எந்த வயதில் காதலிக்கிறோம் என்பதில் கவனம் இல்லாமல் போனதால் படிக்கும் போதே குடும்பத்தை எதிர்த்து திருமணம் செய்து கொண்டார்.

ஒரு ஆண் குழந்தையும் பிறந்த நிலையில் ஒன்னறை ஆண்டுகளிலேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டு கணவர் பிரிந்து விட, 8 மாத கைக்குழந்தையுடன் தவித்த நிலையில் காதல் திருமணம் செய்து கொண்டார் என்ற காரணத்தால் பெற்றோரும் ஆதரிக்காத சூழலில் பாட்டியின் குடிசையில் வசித்துள்ளார்.

குழந்தையை தூங்க வைத்து விட்டு சோப்பு, மசாலா பொருட்களை வீடுவீடாக சென்று விற்பதும், திருவிழாக்கள், மற்றும் கடற்கரையில் எலுமிச்சை சாறு, ஐஸ்கீரிம் உள்ளிட்டவைகளை விற்பது என்று தன் வாழ்க்கை முழுவதும் வறுமையில் வாடினாலும் சிரமத்துடன் படிப்பையும் தொடர்ந்து பட்டம் பெற்றுள்ளார்.

சிறு வயதில் இருந்தே படிப்பு, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் ஆர்வம் இருந்த காரணத்தினால் 2014.ம் ஆண்டு காவல் பணிக்கு விண்ணப்பித்துள்ளார். காவல் பணியும் கிடைத்துள்ளது. பணியில் இருந்து கொண்டே காவல் உதவி ஆய்வாளர் தேர்வும் எழுதி தேர்ச்சியும் பெற்றுள்ளார். இதனையடுத்து ஜுன் 25-ம் தேதி வர்கலா காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

10 ஆண்டுகளுக்கு முன் தான் ஐஸ்கீரிம், எலுமிச்சை சாறு விற்ற இடத்திற்கே காவல்துறை அதிகாரியாக பணியேற்பு செய்த காரணத்தால் தான் அனைவரு ம் பாராட்டி வருகின்றனர்.

மனதில் உறுதி வேண்டும். வெளியே தெரியாத எத்தனையோ ஆணிசிவாக்கள் இருக்கின்றார்கள்.

ஆணி சிவா அவர்களை மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் மனதார வாழ்த்துகிறோம்! சிங்கப்பெண்ணே தொடரட்டும் உனது பணி!

**தஞ்சை தனலட்சுமி**



# மனைவிக்கு திடீர் சந்தேகம் வந்தது

தன்னுடைய கணவனுக்கு
காது கேட்கவில்லையோ என்று?
ஆனால்... இதை கணவனிடம்
நேரடியாக கேட்க அவருக்கு தயக்கம்
இந்த விஷயத்தை அவரின் உறவுக்கார டாக்டருக்கு தெளிவாக விளக்கி ஒரு கடிதம் எழுதினார்....
டாக்டரிடம் இருந்து வந்த பதிலில்...
"இருபது அடி தூரத்தில் இருந்து கணவரிடம் ஏதாவது பேசிப் பாருங்கள்,...
கணவரின் காதில் விழவில்லை எனில்....
சற்று நெருங்கி பதினைந்து அடி தூரத்தில் இருந்துப் பேசுங்கள்
பின் பத்து, ஐந்து இப்படி குறைத்துக் கொண்டே நெருங்கிச் சென்று பேசுங்கள்
எத்தனை அடி தூரத்தில் இருந்து பேசினால் கணவருக்கு காது கேட்கவில்லை எனத் தெரிந்தால் அதற்கேற்றபடி சிகிச்சை அளிக்கலாம்" என்றிருந்தது.
அதைக் கேட்டவுடன் மனைவிக்கு ஒரே குஷி
அடுத்தநாள் வீட்டு வாசலில் இருந்தபடியே உள்ளிருந்த கணவரிடம்...
இன்று மகனுக்கு பள்ளி கட்டணம் கட்டியாச்சானு? கேட்டாள்.
பதில் எதுவும் இல்லை...
பின் வீட்டு வரவேற்பறையில் இருந்து அதே கேள்வியைக் கேட்டாள். அதற்கும் பதில் இல்லை,
ஹாலில் இருந்து கேட்டாள்,
சமையலறை வாசலில் இருந்தும் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள். .
கணவரிடமிருந்து பதிலே இல்லை.
போச்சு இரண்டு ஸ்பீக்கரும் அவுட் ஆகிவிட்டதுபோல என்று மனதில் கன்ஃபர்ம் செய்து விட்டார்.
கடைசி வாய்ப்பாக கணவனின் காது அருகே சென்றுச் சத்தமாக....
இன்னைக்கு பையனுக்கு பள்ளிக்கு கட்டணம் கட்டியாச்சானு?" கேட்டாள்.
காதில் ஏதோ குண்டு வெடித்தது போல் இருக்கவே... அவளின் கணவன் அவளை கோபமாக திரும்பிப் பார்த்து,
"ஏன்டீ இப்படி கத்துற, நீ வாசல் கேட்டிலிருந்து , வரவேற்பறையில் இருந்து,ஹாலில் இருந்து, சமைலறை வாசலில் இருந்து கேட்க, கேட்க நானும் கட்டியாச்சு கட்டியாச்சுனு சொல்லிக்கிட்டே இருக்கேன்,
அது உன் காதில் விழவில்லையா?
காதுல என்ன பஞ்சு மூட்டையா வைச்சிருக்க...? என பொரிந்துத் தள்ளிவிட்டான்...
மனைவி அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றாள்.
தவறு தன்னிடம் தானா?
கதையின் நீதி
இப்படித்தான் பலர் பிரச்சனையை நம்மிடம் வைத்துக் கொண்டு...
அது பிறரிடம் இருப்பதாக நினைத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்
என்ன விசித்திரம்!!!
இந்தப் பதிவு சிரிக்க மட்டும் அல்ல, சிந்திக்கவும்கூடத்தான்

செவித்திறன் குன்றியோர், வாய் பேச முடியாதோர், முடித்திருத்தம் செய்வோர் என பல குடும்பங்களுக்கு கொரோனா நிவாரண சிறு உதவிகளாக திருநெல்வேலி மின்வட்டக்கிளை சார்பில் வழங்கப்பட்டது.





பெரம்பலூர் கிளை சார்பில் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.



சென்னை மேற்கு கிளை சார்பில் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.



தர்மபுரி பாப்பிரெட்டி பட்டி மின் ஒப்பந்த தொழிலாளி அசோக்குமார் மின்விபத்தில் மரணம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காமல் மெத்தனப் போக்கோடு இருக்கும் மின்வட்ட நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 13.07.2021






COTEE
CITU



ஒப்பந்த ஊழியர்களுக்கு வேலை தர மறுக்கும்
தாம்பரம் கோட்ட நிர்வாகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian